www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தத்துவச் சித்திரம்

## சோமகாந்தன்

*Parthipan*
*Uhlandstr. 40*
*44147 Dortmund*
*Germany*

**விற்பனை உரிமை:**

**பாரி நிலையம்**

**184, பிரட்வே:சென்னை-600 108**

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு—டிசம்பர்,1993
(c)

Parthipan
Uhlandstr. 40
44147 Dortmund
Germany

விலை: ரூ-12 - 00

249/95

THATHUVA CHITHIRAM

A Collection of Radio talks on Ethics by

N. SOMAKANTHAN
215 G1/1 Park Road, Colombo 5, Sri Lanka



| | | |
|---|---|---|
| First Edition | — | December 1993 |
| Pages | — | 92+VIII |
| Size | — | 18 × 12 . 5 Cm |
| Types | — | 10 Point |
| Paper | — | Creawove 10.7 Kg |
| Binding | — | Duplex Board |
| Price | — | Rs.12/- |

Published by: Kumaran Publishers
27, 2nd street, Kumaran Colony,
Vadapalani, MADRAS-600 026

Printed by: Surya Art Printers, Ms-24

படிப்பகம்

# அறிமுகம்

'ஈழத்துச் சோமு' என்ற புனை பெயரிலே சிறு கதைகள், நாவல், கட்டுரைகள் என்றெல்லாம் இலக்கியத்தின் பரபந்துபட்ட அம்சங்களிலே ஆழத்தடம் பதித்துள்ள திரு. நா. சோமகாந்தன் அவர்கள் இலங்கையின் சிரேட்ட எழுத்தாளர்களுள் ஒருவர்.

இலக்கியத்தை மட்டுமன்றி, இலக்கியவாதிகளையும் நேசித்து இலங்கையின் படைப்பிலக்கியத் துறையின் பாரம்பரியத்தையும், தனித்துவமான சிறப்பியல்புகளையும் பல்வேறு மகாநாடுகள் மூலமாகவும், அமைப்புகள் மூலமாகவும் வெளிப்படுத்திய பெருமைக்குரியவர்.

நீண்ட காலமாகவே ஆற்றல்களையும், ஆளுமையையும், அருங்குணங்களையும் அறிவேன் என்றாலும் கூட நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனது தயாரிப்பிலான வானொலி நிகழ்ச்சிகளிலே பங்கு பற்றத் தொடங்கிய போதுதான் ஏற்பட்டது.

'நடைமுறை வாழ்க்கைத் தத்துவம்' என்ற பெயரிலே மக்களை நல்வழிப்படுத்துகின்ற சிந்தனைத் தொடரை நாள்தோறும் அதிகாலையிலே ஒலிபரப்ப இருக்கின்றோம். பங்கு பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்ட போது...அவர் இந்தியாவில் இருதய சத்திர சிகிச்சையை முடித்துக்கொண்டு நாடு திரும்பி சில நாட்கள்தான் ஆகியிருந்தன.

www.padippakam.com



இருந்த போதிலும்—

எழுத்துப் பணியை உயிரினும் மேலாக மதிப்பவராத லால் எமது கோரிக்கையை உடனேயே ஏற்றுக் கொண் டார்.

உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வு தேவைப்படுகின்ற அந்த நேரத்திலே அவருக்கு கஷ்டத்தைக் கொடுக்கின் றேனோ என்று ஒரு புறம் தயக்கமாகவும் இருந்தது.

இல்லை 'சார்' செய்கின்றேன் என்று ஒப்புக்கொண்ட தோடு; நான் எதிர்பார்த்ததையும் விட அழகாகவும், அருமையாகவும் எழுதிக் கொண்டு வந்து உற்சாகத்தோடு பங்கு பற்றி என்னையும் ஊக்கப்படுத்தினார்.

அந்த நிகழ்ச்சித் தொடர் மிக நன்றாக இருந்தது என்று பலராலும் பாராட்டப் பெற்றது.

அந்தப் பாராட்டுகளே இப்போது இந்த நூலாக உருப்பெறவும் கால்கோளாகியிருக்கும் என எண்ணு கிறேன்.

அவரின் முயற்சி பண்பும் பயனும் மிகுந்தது.

**எஸ். சண்முகரத்தினம்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு-7
*15-8-1993*

படிப்பகம்

www.padippakam.com

# மரபின் தொடர்ச்சி

இந்திய இலக்கிய மரபை ஆழமாக அவதானிக்கின்ற போது ஒரு உண்மை தெரியவரும். சமூகவியல், மானிடவியல், இலக்கிய மரபு ஆகியன மனிதனது ஒழுக்க வரம்புகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவன. நாகரிக காலந்தொட்டு, ஒழுக்கவரம்பு பற்றிய இலக்கிய மரபை எடுத்து நோக்குகின்ற போது, அது கருத்து ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் பௌத்த, சமண சமயங்களின் மூலமாகவே நிர்ணயிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்ததைக் காண முடிகின்றது. இந்தியாவின் நீதித்திரட்டு நூல்களை அட்டவணைப்படுத்திப் பார்த்தால் இந்த உண்மை நிரூபணமாகும்.

பௌத்தமும் சமணமும் மானிட வாழ்வை லோகாயுதக் கண்கொண்டு பார்க்க முயன்றன. எனவே அவை, மானிட வாழ்வை நெறிப்படுத்துவதன் மூலமாக அவர்களின் துயரங்களுக்கு நிவாரணம் தேடின.

பௌத்த, சமண சமயங்களின் தாக்கம், தெற்கே கர்நாடகத்திலும் தமிழகத்திலுமே அதிகளவில் ஏற்பட்டிருந்தன. எனவே தத்துவ ரீதியாக இந்தப் பகுதிகளில் இந்தச் சமயங்கள் தம்மை நிலைப்படுத்தும் வரலாற்றுத் தேவையும் உண்டாயிற்று. பிரசங்க வாயிலான போதனைகள் மட்டுமன்றி, எழுத்து மூலமாகவும் தமது தத்துவங்களை இவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பௌத்த சமணக் கருத்துக்களை மிக எளிமையாக இந்நூல்கள் விவரித்தன. சாதாரண மனிதனுக்கு மிக அருகே சென்று அவனது மனதில் தைக்கும் விதமாக இவை போதனை செய்தன. இவற்றின் அழுத்தம் தமது எல்லைகளை மீறி அக்காலத்தையதும், பின்னதுமான நீதி நூல்களை மட்டுமன்றி காவியங்களையும், கவி மரபையும் அண்மைக் காலத்து வசன இலக்கியங்களையும் கூடப் பாதித்தன.

திருக்குறள் என்ற நீதிநூல், அன்றாட மானிட வாழ்வு, சமூக ஒழுங்கு, நெறிமுறை என்பனவற்றை வலியுறுத்தியது. சமய நிறுவன மேலாண்மைக்கும் கருத்துக்களுக்கும் எதிராக லோகாயதக் கருத்தோட்டத்தை முன்நிறுத்திய இந்த சமயங்களைப் போலவே, திருக்குறளும் தன் காலத்து பழமைவாத, நிறுவன ஆதிக்கப் போக்குகளின் கலாச்சாரப் பண்புகளுக்கு எதிராக நீதி ஒழுக்க வரப்புகளை பிரகடனப்படுத்த முயன்றது.

திருக்குறளின் ஒழுக்கஞ்சார்ந்த கருத்துக்கள், பின் வந்த நீதி நூல் மரபுகளால் சுவீகரிக்கப்பட்டன. அவை அந்தக் காலத்து அரசியல், சமுதாயப் பிரிவுகளின் தவிர்க்க முடியாத தேவையாகவுமிருந்தது. நாலடியார், திரிகடுகம் பேரன்ற நீதிநூல்களில் திருக்குறள் கருத்துக்கள் பெரு நிழலாய்க் கவிந்தது இதனால்தான்.

இப்படித் தொடங்கிய ஒழுக்கவரம்புக் கருத்துக்கள் பின்னர் வந்த எல்லா இலக்கிய, தத்துவ மரபுகளையும் தொடர்ச்சியாக ஆட்கொண்டன. இன்றுவரை தொடர்கின்றன அவை.

மகாகவி பாரதி தொடக்கிய நவீன கவிமரபும், வ. வே. சு. ஐயர் உருவாக்கிய உரைநடைப் போக்கும், பிரசங்க மரபுகளும் இந்த ஒழுக்க வரம்புக் கருத்துக்களை உள்வாங்கி வெளிப்படுத்தின. வெளிப்படுத்துகின்றன.

www.padippakam.com



திருக்குறள் கருத்துக்களை தமிழ்நாடு அரசு பேருந்துகளில் பொறித்திருப்பது, வெகுஜன தொடர்பு சாதனங்கள் இவற்றை நாளாந்தம், நற்சிந்தனைகளாய் தெரிவித்து வருதல் என்பன இந்த வரலாற்றின் தொடர்ச்சியே.

விமர்சகராயும், படைப்பாளியாகவும் புகழ் பெற்றுள்ள திரு சோமகாந்தனின் வானொலி உரையும் இந்தப் போக்கின் நவீன வடிவமே.

'உறவு', 'தொண்டு', 'கல்வி', 'இன்சொல்', 'ஒழுக்கம்', 'நட்புறவு' என்பன போன்ற தலைப்புக்களில் எளிய, இனிய, ஆழமான, சுவை பயக்கின்ற அவரது கருத்தோட்டங்கள் உரைச் சித்திரங்களாய் படிப்பவர் மனதைக் கவருந் தன்மையனவாயுள்ளன. எல்லாரும் படித்துப் பயன் பெறத்தக்க இந்தச் சிந்தனை வீச்சு, இன்றைய இளந்தலை முறைக்கு மிகவும் பயன்பாடு தரக் கூடியது, இந்நூலின் ஆசிரியரை வாழ்த்திப் பாராட்டுகின்ற இதே வேளையில், இந்நூல் இளந்தலை முறையைச் சென்றடைய வேண்டுமென்ற எனது ஆவலையும் இங்கே பதிவு செய்கின்றேன்.

**—செ. யோகநாதன்**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உறவு | 9 |
| 2. | தீவினை | 13 |
| 3. | குணம் | 16 |
| 4. | கேண்மை | 19 |
| 5. | வழிகாட்டி | 22 |
| 6. | நன்றி | 24 |
| 7. | கல்வி | 28 |
| 8. | தொண்டு | 32 |
| 9. | சிறியர் பெரியர் | 35 |
| 10. | இன்சொல் | 37 |
| 11. | குற்றமில்லா வாழ்வு | 39 |
| 12. | அடக்கம் | 42 |
| 13. | முதுமையில் அறம் | 45 |
| 14. | பேரறிவு | 48 |
| 15. | சமுதாய உணர்வு | 51 |
| 16. | அறிவுரை | 54 |
| 17. | பருந்துகள் | 57 |
| 18. | வாய்மை | 60 |
| 19. | கற்றதை அறிவுறுத்தல் | 63 |
| 20. | விடா முயற்சி | 67 |
| 21. | சான்றோர் நட்பு | 71 |
| 22. | இரக்கம் | 75 |
| 23. | இயற்கையின் அழிவு | 79 |
| 24. | ஒழுக்கம் | 84 |
| 25. | நட்புறவு | 88 |

www.padippakam.com

# சித்திரம் 1.

## உறவு

அது ஓர் அழகிய குளம். பரப்பில் பெரியகுளம். ஊர் எல்லையில், வயல்வெளி. அவ்வயல்களின் ஓர் ஓரமாக அந்தக் குளம் இருந்தது. அண்மையில் பெய்த மழையினால் நீர் நிறைந்து, குளத்தின் கரைகளைத் தடவிக் கொண்டிருந்தது. குளம் நிறைய ஆம்பல் பூக்கள் சிரித்துக் கொண்டிருந்தன. வெள்ளையும், வெளுத்த ஊதா நிறத்திலும் அவை புன்னகைத்துக்கொண்டிருந்தன. வண்டுகள் ரீங்காரமிட்டு, மலருக்கு மலர் தாவிக் கொண்டிருந்தன.

வெள்ளைக் கொக்குகள், கரையில் வரிசையாக ஒற்றைக் காலில் நீண்டநேரமாக உட்கார்ந்திருந்து, நிஷ்புரியும் ஞானிகளை நினைவுக்குக் கொண்டு வந்தன. பனங்கிழங்கு போன்ற பவழச் செவ்வாய் கொண்ட நாரைகள் நீரை நோக்கிப் பறப்பதும், கரையில் வந்து அமர்வதுமாக கிளித்தட்டு மறித்தன. எச்சசொச்சங்களைக் கண்டு விட்ட காகங்கள், கரைந்து தமது சுற்றத்தை அழைத்தன. மந்தைகள் நீர்குடிக்க வரிசை வரிசையாக அந்தக் குளத்தை நோக்கி வந்தன. கோவில் பணியாளன் கூட மலர் பறிக்க பூக்கூடையுடன் நெடுநாட்களுக்குப்பின் அங்கு வந்து விட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



பூப்பறிப்பதும் ஒரு தொழில்; அத்தொழில் மூலம் அவனுக்கு ஊதியம் கிடைக்கிறது. ஊதியத்தைக் கொண்டு அவனுக்கு தன்னையும், தனது குடும்பத்தையும் உண வளித்து வாழ்க்கையை நடத்த முடிகிறது. உழைப்பின் பயனாகத்தான் செல்வத்தைச் சேகரிக்கலாம். நேரான வழியில் சேகரிக்கப்படும் செல்வம் மட்டுமே நீண்ட காலம் நிலைத்து நிற்க வல்லது; சிலருக்கு விடா முயற்சியோ, உழைப்போ இன்றி திடீர்ச் செல்வம் கிடைப்பதும் உண்டு! அப்படியான வாய்ப்புக் கிடைப் பவர் இவ்வுலகில் விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிறிய எண்ணிக்கையானவர்கள் தான்.

ஒரு பணக்காரர் இருந்தார். இளமையில் அவர் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்ததன் காரணமாகப் பணக்காரர் ஆனவர்; திரைகடலோடித் திரவியம் சேர்த்து குறுகிய காலத்திலேயே அவர் பணக்காரராகி ர்ாகி விட்டார். அவருக்கு வாய்த்த மனைவி, பொருளைப் பெருக்குவதில் அவரிலும் பார்க்க பல வழிகள் தெரிந்தவள். சீட்டுப் பிடித்தாள். அவசர பணத் தேவைக்கு அவளிடம் ஓடிவரும் அயலவர்கள், ஏழை களுக்கு இல்லை என்னாது கொடுத்தாள்— முதலுடன் சேர்த்து அரு வட்டியையும் மாச முடிவில் அவர்கள் அவளுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இத்தனை பணம் இருந்தும், உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என அவன் இருந்தான். அணி மணி, ஆடை அலங் காரம் என்ற ஆசை எதுவுமின்றி — பணத்தைக் குட்டி போட வைப்பதிலேயே அவளும் குறியாக இருந்தாள். நாளுக்கு ஒருதடவை மட்டும் அந்த வீட்டின் அடுப்பு புகைந்தது. மூன்றுவேளைப் பசியையும் அவர்கள் போக்கிக் கொண்டார்கள். எச்சில் கையால் கூட அவர்கள் காகம் கலைப்பதில்லை. அத்தனை கஞ்சத் தனம்; குழந்தைச் செல்வமும் இல்லாத அக்குடும்பம்

படிப்பகம்

www.padippakam.com



பொருட் செல்வத்தை பூதம் போலப் பாதுகாத்தது. ஒருநாள்: கடும் மழையில் அந்த வீடு சரிந்து விழ, இருவரும் அதில் சிக்கி.........

எங்கோ அநாதைப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த தூரத்து உறவுப் பையனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவர்களின் முழுச் சொத்துக்கு அவன் ஏக அதிபதி ஆகிவிட்டான். அவனுக்கு உழைப்பின் பெருமை தெரியாது? செல்வத்தின் அருமை தெரியாது. உறவு, சுற்றம் எனக் கூறிக்கொண்டு முன்பின் தெரியாதவர்கள் அவனைச் சூழத் துவங்கி விட்டனர். புதுப் பணக்கார இளைஞனின் உள்ளத்தில் புகைந்த ஆசைகளை ஊதிச் சுவாலிக்கச் செய்தது சூழ்ந்திருந்த கூட்டம். அவர்களுக்கு அவன் அள்ளிக் கொடுத்தான். வசதியான பெரிய புதிய வீடு, உல்லாசமான கார் என அவன் வசதிகளைப் பெருக்கிக் கொண்டான். நாள்தோறும் புதிய புதிய அழகிய மகளிர்கள் இரவில் அவன் வீட்டுக்கு வந்தனர். பொன்னும், மணியும் அவர்களுக்குச் சூட்டி மகிழ்ச்சியில் அவன் திளைத்தான். நல்லபுத்தி சொல்லிய வயோதிபத் தாயை அவன் திட்டினான்; புத்திபுகட்ட வந்த வாலிப நண்பர்களை அவன் பொருட்படுத்தவேயில்லை. கஞ்சன் தேடிய செல்வம் இந்த ஊதாரியினால் சில காலத்திலேயே அடியோடு கரைந்து போய்விட்டது.

பெருந்தோப்பு எனக்கருதிக் கொண்டிருந்தவன் தனிமரமாகி விட்டபோது, அந்த வயோதிபத் தாய் மட்டும் அவனுடன் கூடவே இருந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பல மாதங்களாக மழை பொய்த்து விட்டது. அத்தக் குளத்தின் நீர் வற்றி விட்டது; அடியில் சேறும் சுரியும் மட்டும் எஞ்சியிருந்தன. அங்கு பறவைகள் வருவதில்லை; மந்தைகள் வருவதில்லை; ஆனால் அதில் படர்ந்

www.padippakam.com



திருந்த கொட்டியும், ஆம்பலும், நெய்தலும், அந்தக் குளத்தின் சகதியில் தமது கொடிகளைச் சுருட்டிக் கொண்டு, குளத்தை விட்டுப் போகாமல் படுத்துக் கிடந்தன.

''அற்றகுளத்தின் அறு நீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு-''

மூதுரை.

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 2.

# தீவினை

கிழக்குத் திசையிலே வண்ண வண்ணக் கோலங்கள். செங்கதிரோன், வானில் எழுந்து தவழ்வதற்குத் தயாராகி விட்டான். எங்கும் பேருற்சாகம்!- புள்ளினங்கள், கைதட்டி மகிழ்வதுபோல சிறகடித்துப் பறந்து ஆரவாரிக்கின்றன. பசுக்கள் பாலாபிஷேகத்துக்கு பால் வழங்கக் குரல் கொடுத்து அழைக்கின்றன; போதவிழ்ந்த மலர்களின் மணத்துடன் வணக்கத் தலங்களிலிருந்து எழும் ஊதுவத்தி சாம்பிராணி புகைகளின் நறுமணமும் சேர்ந்து இனிய சூழலுக்கு இதம் சேர்க்கின்றது.

மனித இயக்கமும் ஆரம்பமாகி விட்டது.

தோளில் ஏர், கைகளில் எருதுகளுடன் வயலை நோக்கி விவசாயிகள் புறப்பட்டு விட்டனர். தமது தோட்டத்துப் பயிர்களுக்கு ஏற்றம் இழுத்தும், துலா ஓடியும் நீரிறைக்கும் கமக்காரர்கள்; தொலைவிலுள்ள சந்தைக்கு தோட்டத்தின் விளைச்சலை விற்பனைக்காகச் சுமந்து செல்லும் வண்டிகளின் சில்லுகள் ஏற்படுத்தும் ஒலி; அவ் வண்டிகளை இழுத்துச் செல்லும் மாடுகளின் வெண்டயங்களின் கலகலப்பு; பத்திரிகை விநியோகிக்கும் பையன்களின் சைக்கிள் சத்தம்; கிராமங்களிலும் நகரங்களிலும் மனித இயக்கம் தொடங்கி விட்டது.

கல்லூரி செல்லும் பிள்ளைகளுக்கும், வேலைத்தலம் செல்லும் கணவனுக்கும் கட்டுச்சாதம் தயாரித்துக் கொடுப்பதற்காக-தேநீர், காலைப்பலகார வேலைகளை முடித்து விட்டு, இல்லத்தலைவி அடுப்பில் உலையை ஏற்றி விட்டாள். கண கண என அடுப்பு எரிகின்றது. பானை நிறைந்த நீர் தள தள என்ற சத்தத்துடன் கொதிக்கின்றது. பாதிநீரை அவள் பக்குவமாக வாளியில் ஊற்றுகிறாள்; ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் இளைய மகன் குளிப்பதற்கு வெந்நீர் வேண்டும். களைந்து, கல்லரித்து எடுத்து வைத்த அரிசியைப்பானையில் போட்டு, இன்னும் சிறிது நீர் ஊற்றி உலையை ஏற்றுகிறாள். சிறிது நேரத்தில், நுரை எழுப்பி பானை பொங்குகிறது!

மனிதன் வாழ உணவு தேவை; ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஊட்டச் சத்து மிக்க ஆகாரம் தேவை. உலகிலுள்ள உயிரினம் வாழ்வதற்கு அவற்றுக்கு உரிய இரை வகைகள் தேவை.

உணவுக்குப்பிரதானம் உழைப்பு. உழைப்பின் மூலம் தான் பொருளையீட்ட முடியும்; குடும்பத்தின் தேவைகளை ஈடு செய்ய முடியும். தத்தமது சக்திக்கேற்ப, ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அறிவு சார் தொழில், உடல் உழைப்பு என ஏதோ வகையில் ஒவ்வொருவரும் உழைப்பை நல்க வேண்டும். இளமைப் பருவத்தில் மாணவர்கள் கற்க வேண்டும்; ஆரோக்கியம் குன்றிய நோயாளிகள், வயோதிபர்கள், குழந்தைகள் தவிர மற்றவர்கள் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டும். உழைப்பின் மூலம் ஈட்டப்படும் பொருள்தான் மனதுக்கு நிறைவு தருவது; பொருளை விரைவாக ஈட்ட வேண்டும் என்பதற்காக தவறான வழி வகைகளை மேற் கொள்ளக்கூடாது; அது சமுதாயக் குற்றம்; அவ்வழியில் செல்பவர்கள் இறுதியில் துன்பத்திற்கும் அவமானத்துக்கும் ஆளாக நேரிடும் என அனுபவம் மிக்க சான்றோர்கள் கூறியுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்.

www.padippakam.com



விலங்குகள், பறவைகள், மற்றும் உயிர் வாழ்வன வெல்லாம் ஏதோ வகையில் உழைப்பின் மூலமே தத்தமது அன்றாட உணவைத் தேடிக் கொள்வதை நாம் காணுகின் கின்றோம். ஆறு அறிவு படைத்த மனிதர்களில் சிலர் பிறர் உழைப்பில் வயிற்றை நிரப்பிச் சோம்பி இருப்பது நியாயமற்றது; வெட்கத்துக்கு உரியது. முயற்சி உடை யார் ஒரு போதும் தாழ்வுறுவதேயில்லை; விடாமுயற்சி யுடன் உழைப்பை மேற்கொள்பவனின் உழைப்பை மெச்சி அவன் கரங்களில் திருமகள் தேவியே உட்கார்ந்து விடு வாள் என்பது பெரியார்களின் கூற்று. உழைப்புக்கான முயற்சியை மேற்கொள்ளாமல், உட்கார்ந்து இருந்து கொண்டு, ''எனக்குச் செல்வம் இல்லையே! இறைவா நிறையப் பொருள்களை அருள்வாய்'' என விசாரமாகப் பிரார்த்திப்பதில் பயனில்லை. மெய்வருந்தி உழைப்பவ னுடைய முயற்சிக்கான பயன் பொய்த்துப்போய் விட மாட்டாது. நேரான பாதையிலே, சளைக்காமல் விடா முயற்சியுடன் உழைப்பதுதான் செல்வத்தைச் சேர்ப்பதற் குரிய நல்லவழி.

வெறும் பானை பொங்குவதில்லை; அரிசியிட்ட பானை தான் பொங்கும்; இதனை தினமும் நாம் எமது வாழ்க்கையில் காண்கின்றோம்.

**''செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இரு நிதியம்-வையத்து**
**அறும் பாவம் என்ன அறிந்து அன்றிடார்க்கு இன்று**
**வெறும் பானை பொங்குமோ மேல்''**

**—நல்வழி.**

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 3.

# குணம்

பூமித்தாயை, வர்ண புத்திரன் பல நாட்களாக எட்டிப் பார்க்கவில்லை. எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து விட்டான். மகனைக் காணவில்லையே காண வில்லையே எனத்தாயின் மனம் துடித்துக்கொண்டிருந்தது. மகனைக் காணாத துன்பத்தினால், உள்ளம் மட்டுமல்ல தாயின் உடலும் நாளுக்குநாள் வாடத் துவங்கிவிட்டது. முகத்தில் செழுமையில்லை. மேனியின் பசுமைக் கருகத் துவங்கி விட்டது. எங்கோ வெகு தூரத்துக்கு அப்பால் வழியில் சந்தித்த வாயுதேவன் வர்ணனின் காதில் இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டான். வர்ணன் துடித்துப் போய் விட்டான். வாயுதேவனைப் பின் தொடர்ந்து ஓடோடி வந்தான். தாயின் மடியில் குதித்து களிநடம் புரிந்தான்.

பூமித்தாயின் மனம் குளிர்ந்தது!

வயல்களில் மழை; கானகத்தில் மழை: இன்று குளங்கள் நிரம்பி வழிந்தன. மலைப் பகுதிகளில் பெய்த கடும் மழையின் வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது. வற்றிப் போய் சுவடே தெரியாமல், கொதி மணலாக இருந்த அந்த ஆறு உயிர் பெற்று விட்டது; மரஞ் செடி கொடி இவற்றை உருட்டிக் கொண்டு அந்த

www.padippakam.com



ஆறு வீறு கொண்டு சீறியபடி வேகமாகப் பாயத்துவங்கி விட்டது. ஆற்றின் இரு புறமும் ஏழைகள் வாழும் கிராமங்கள்; அந்த ஏழைகளின் சிறு சிறு குடிசைகள்; ஆற்றின் வேகம் கரைகளை உடைக்கத் துடிக்கிறது; வெள்ளம் அகலக் கால் வைப்பதற்கு எத்தனிக்கிறது; குழந்தைகளையும், வயோதிபர்களையும் அப்புறப்படுத்தி விட்டு கையில் அகப்பட்டவற்றை அள்ளிக் கொண்டு பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பவர்கள் ஒருபுறம். உடல் வலுவுள்ள ஆண்களும், பெண்களும் மண்வெட்டி கூடைகள் ஏந்தி ஆற்றின் வேகத்தைத் தோற்றுப் போகச் செய்யும் வகையில் சுறுசுறுப்பாகி அணைகளை இறுக்க மாக அமைத்து, வெள்ள நீரை வயல் வெளியின் பள்ளத்தில் உள்ள வாவியை நோக்கிப் பாயச் செய்கி றார்கள். வாவியில் தங்கியிருக்கப் போகிற நீர் மழை யில்லாக் காலத்திலும் அவர்களின் வயல் பாசனத்துக்குக் கை கொடுத்து உதவத்தான் போகிறது; உரிய வேளையில் கூட்டு முயற்சியாக அவர்கள் அணை கட்டாது வெள்ளத் தின் போக்கிற்கே அதனை விட்டிருந்தால் எத்தனை அநர்த்தங்கள் அங்கு ஏற்பட்டிருக்கும்? அவர்களின் குடிசைகள், குழந்தைகள், ஆடு மாடுகள், அவர்களின் சிறு சிறு தோட்டங்கள்... இவற்றிற்கு என்ன நேர்ந்திருக்கும்?

மனிதன் ஒவ்வொருவரும் இதைச் சிந்திக்க வேண்டும்.

மனிதன் உணர்வுகளைத் துறந்த யோகி அல்ல; உடல் உணர்வுகள், உள்ளத்து எழுச்சிகள் முதலியவை கொண் டவன் மனிதன் எனினும் அவன் மனம் நல்லவற்றை நாட வேண்டும்; கெட்ட உணர்வுகளை, தனக்கும் மற்றவர் களுக்கும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய உணர்வுகளைக் கட்டுப் படுத்த வேண்டும். மனிதனிடம் உள்ள கோப உணர்வு பெரிய தீங்கு விளைக்கக் கூடியது; அது அவனுடைய உடம்பின் இரத்த நாளங்களைப் பாதிக்கின்றது. சிந்த னைத் திறத்தை ஊறுபடுத்துகின்றது; அவனுடைய மதிப்பையும், மரியாதையையும் கெடுக்கின்றது; கோபத்

தினாலே மற்றவர்களுக்கு மனநோவையும் அவமானத்தையும் மட்டுமல்லாமல் சில வேளைகளில் மற்றவர்களின் உடலுக்குப் பாரிய நஷ்டத்தையும் ஏற்படுத்தலாம்; அதன் மூலம், இவன் பெரிய குற்றம் இழைத்து, தான் துன்பப்படுவதுமட்டுமல்லாமல் தனது குடும்பம், இவனுடைய கோபத்தினால் பாதிக்கப்பட்டவனுடைய குடும்பம், உறவினர்கள் ஆகியோரையும் வாழ்நாள் முழுவதும் துன்பத்திலே தள்ளுகின்ற கொடுமையைச் செய்தவனாகின்றான்.

அநீதியைக் காணும் போது ஆவேசம் பிறப்பது இயல்பு; அவமானப்படுத்தப்படும் வேளையில் சினம் சீறி எழும். ஆனால் மனிதன் மிருகம் அல்ல; அடிப்பது, உதைப்பது, கடிப்பது காட்டு மிருகங்களின் தினசரித் தொழில்; ஆறாவது அறிவென்ற பகுத்தறிவு - சிந்திக்கும் திறம் அற்றவை மிருகங்கள். அறிவின் மூலம் தெளிவாகச் சிந்தித்து, செயலாற்றுவதே மனிதனுக்குரிய தன்மை. கொதித்து எழுகின்ற கோபத்தை அடக்கி கட்டுப்படுத்துகின்ற குணமே, மனிதனிடமிருக்க வேண்டிய மிகச் சிறந்த குணமாகும்.

**''உள்ளங்கவர்ந்து, எழுந்தோங்கு, சினம் காத்துக்**
**கொள்ளும் குணமே குணம் என்க—வெள்ளம்**
**தடுத்தல் அரிதோ தடங்கணா தான் பேர்த்து**
**விடுத்தல் அரிதோ விளம்பு.''**

—நன்னெறி.

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 4.

# கேண்மை

நாம் வாழும் சமுதாயம் பரந்தது; விரிந்தது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அமைந்திருந்தது போன்ற கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை இன்று இல்லையென்றே சொல்லலாம். அதனால் தனி ஒருவனின் வாழ்க்கை அவனின் குடும்பத்தைச் சேர்ந்தோரிலும் தங்கியுள்ளது. அதேபோல அக்குடும்பத்தாரும் அத்தனி மனிதனிலே பலவழிகளிலும் தங்கியுள்ளார்கள். முழுக் குடும்பமுமே தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு சமூகத்தின் பலரில் தங்கியிருக்க வேண்டிய சமூக அமைப்பு முறை இன்று நிலவுவதை நாம் காணுகின்றோம். காலையில் தேநீர் தயாரிப்பதற்கு தேவையான பாலுக்கு அன்றன்றாடம் பால்காரர் வரவேண்டும்; சமையலுக்கு வேண்டிய காய் கறிகளுக்கு அதைச் சுமந்து விற்பவர் வரவேண்டும்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஒட்டோ அல்லதுஒரு வாகனம்வரவேண்டும்; இல்லத் தலைவியும் வேலைக்குச்செல்பவளாகஇருந்தால், குழந்தையைப் பார்த்துப் பராமரிக்கக் கூடிய செவிலி ஒருத்தி தேவை. கற்போருக்கு போக்குவரத்துச் செய்வதற்கு பேருந்து அல்லது புகைவண்டி தேவை. ஏன் வீட்டில் சமைத்துக் கொள்ள முடியாத நெருக்கடி வேளைகளில் சாப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கான உணவுச் சாலைகள்

படிப்பகம்

www.padippakam.com



கூடத் தேவை. இன்றைய சமுதாய அமைப்பில் — குறிப்பாக நகர்ப்புறச் சமுதாயத்தில் இவை தவிர்க்க முடியாத தேவைகளாகி விட்டன. எனவே ஒரு குடும்பம் பலரின் பங்களிப்பிலே தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு சமுக கட்டமைப்பு வெகு வேகமாக உருமாறி வருகின்றது.

தொழில் காரணமாக, கல்வி காரணமாக பிறந்த ஊரவர்களையும், பெற்றோர்களையும், உறவினர்களையும் பிரிந்து வேற்று மொழி, பிற பண்பாடு, அந்நியச் சூழல் போன்றவற்றிலே அநேகர் வாழ நேரிடுகின்றது. அவ்வாறான சூழ்நிலைகளிலே, கிடைக்கப்பெறும் நண்பர்கள்தான் ஒருவனுடைய உறவினராக பெற்றோராக சகோதரராக சகலதுமாக அமைகின்றனர். எனவே நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். நல்லவர்களின் நட்புதான் நன்மை தரக்கூடியது; அவர்களின் தொடர் வாழ்க்கையை அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமைக்க உதவக் கூடியது; நல்லோர் நட்பு, பால் நிலவின் குளிர்மையிலே அமர்ந்திருக்கும் சுகானுபவத்தை தரக்கூடியது.

வெண்நிலவின் குளிர்மையில் திழைக்கும் அதேவேளை, ஒரு கணம் அந்த நிலவின் தன்மையை நட்பின் தன்மைக்கு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், சில தத்துவங்களை நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

நிலா, பூரணையிலன்று, வட்ட வடிவில் வானில் எழுந்து வையகத்தை குளிர்மை வெளிச்சத்தில் குளிர்ப்பாட்டும்; குதூகலம் ஊட்டும். பிறகு, நாள்கள் நகர, நகர... தேய்ந்து...தேய்ந்து...தேய்பிறையாகி... முழு இருட்டில் உலகையே மூழ்கடித்து விடுகின்றது. தீயோரை ஒருவன் நட்பாக்கிக் கொண்டால் அவனுக்கு ஏற்படுவது துன்பம், துயரம், வறுமை, வாழ்க்கையில் வெறுமை, இருட்டு. நல்லோர் நட்பு முதற் சந்திப்பின் மகிழ்ச்சியிலேயே ஒருவனைத் திணற வைப்பதல்ல... சிறிது சிறிதா

www.padippakam.com



கவே அது வளரும்; மக்களுக்கு, முன்னிரவில், ஒளிதந்து பயன் தருகின்ற வளர்பிறை போன்றது நல்லோரின் நட்பு. பெரியோர்களுடைய, நல்லோர்களுடைய நட்புக் கிடைக்கப் பெறுபவர்கள் பாக்கியசாலிகள். அவர்களின் நட்புக் கிடைக்கப் பெறுவோரின் வாழ்க்கை ரம்மியமும் குளிர்மையும் கொண்டதாக எந்த இடுக்கண்வரினும் இலகுவில் எதிர்நீச்சல் போட்டுக் கடந்துவிடக் கூடியதாக அமைந்து விடுகின்றது. இந்தத் தத்துவத்தை நாலடியார் பாடல் ஒன்று பின்வருமாறு விளக்குகின்றது.

**''பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
**வரிசை வரியா நந்தும் — வரிசையால்**
**வானூர் மதியம் போல் வைகலின் தேயுமே**
**தானே 'சிறியார் தொடர்பு.''**

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 5

# வழிகாட்டி

நாம் வாழுகின்ற சமுதாயத்திலே ஒழுக்கமும் ஒழுங்கும் தளப்பமடையப்பார்க்கின்றன. நியாயமும் நேர்மையும் சீர்மைகுன்றுகின்றன. நீதி தராசுக்கோலாக நிமிர்ந்து சமமாக இல்லையே என்ற குறைபாடு, முணு முணுப்பு கேட்காமலில்லை.

நேர்மையும் ஒழுக்கமும், பரிவும் முறையும் முதலிய சமுதாய அடிப்படைக் கொள்கைகள் எல்லாம் திருக்குறளிலும் மற்றும் அற நூல்களிலும் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக அழகுக்குத் தோரணமாகத் தொங்குவதற்குத்தானா? மக்களின் அன்றாட வாழ்க்கையில் இவற்றை அவ்வளவாகக் காணோமே என்ற பொதுக் கருத்து நிலவி வருகிறது.

சமூகச் சீரழிவுகள் ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கிற வரையில் மக்கள் கண்களைப் பொத்திக்கொண்டிருக்கும் போக்கைக்கைவிட வேண்டும். ஒழுக்கக்கேடும் ஒழுங்கீனமும் சமுதாயத்தை வேருடன் அழித்து விடக்கூடிய விஷக்கிருமிகள் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

உணவுப் பொருட்களில் கலப்படம், விற்பனைக் கடைகளில் ஊழல்; காரியம் ஆகவேண்டுமெனில் லஞ்சம்-

www.padippakam.com



இப்படிச் சமுதாயம் துர்நாற்றம் எடுக்கும் போது, இளைஞர்கள் உள்ளங்களில் இது ஒரு கேடு கெட்ட சமுதாயம் என்ற எண்ணம் தலையெடுப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

மக்களின் அன்றாடச் செயற்பாடுகளில், நடவடிக்கை களில், ஒழுக்க நியதிகளை, தருமநியாய அறநெறிகளை மீண்டும் கொண்டு வருவது எப்படி?

இளைஞர்களின் உள்ளங்களில் இன்றைய சமுதாயத் தைப்பற்றி நல்லெண்ணம் உருவாக வேண்டும். உருவாக்கப்படவேண்டும்.

சமுதாயத்தில் இன்னும் தருமசக்தி செயலாற்றுகிறது. சமூக விழுமியங்கள் முற்றுமாக அழிந்துவிடவில்லை. ஒழுங்குக்கும் தூயவாழ்வுக்கும் தனியான சிறப்பும் மகத்துவமும் இருக்கிறது என இளைஞர்கள் கண்கூடாக உணரும்படி செய்ய வேண்டும்.

எவன் எப்படி வாழ்ந்தாலும் சரி நான் என்னுடைய அறநெறியிலிருந்து சிறிதும் பிறழமாட்டேன் என்ற உறுதியே அறநெறியின் சாரம்! இந்த உணர்வைக் குழந்தைப்பருவம் முதற்கொண்டே பயிற்று விக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆற்ற வேண்டிய கடமை இது.

சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என வாழ்பவர்களின் உபதேசத்தை எந்த இளைஞனும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

முன் உதாரணங்களே இளைஞர்களுக்கு வழிகாட்ட வல்ல சுடர் விளக்குகள். அதனால் தூய வாழ்வு நடத்தும் பெரியோர்களே இளைஞர்களுக்கு அறிவுரைகூற முடியும். உன்னதமான ஒரு சமுதாயம் உருவாகுவதற்கு மக்களின் விழிப்புணர்வும் அறிஞர்களின் பங்களிப்பும் மேலான வழியாகும்.

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 6.

# நன்றி

இளஞ்சூரியனின் பொற்கதிர்கள் பூமியை இதமாக வருடுகின்றன. கார்காலப் பனிக்குளிரில் சில்லிட்டு நின்ற மரங்கள், செடிகள் அந்த வருடலில், இதங்கண்டு சிலிர்க்கின்றன. அதோ! அந்தத் தென்னந் தோப்பின் மரங்களின் உச்சந்தலையில் இளங்கதிர்கள் படர்ந்து... பசுமையான தென்னோலைகளில் அதுவரை கவ்வியிருந்த பனி... அவசர அவசரமாக உருகி, பூமித்தாய்க்குப் பன்னீர் தெளிக்கிறது. பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல், கருமமே கண்ணாக தண்ணீர் பாய்ச்சும் அந்தத் தோப்பின் சொந்தக்காரன், ஒருகணம் நிமிர்ந்து பார்க்கிறான்.

அந்த இளஞ்சூரிய ஒளியில், அந்தத் தோப்பின் தென்னை மரங்களின் வட்டுக்களில் பல காய்களைத் தாங்கிய பருத்த குலைகள்.... முற்றிய தேங்காய்களைக் கண்ட குலைகள். அவற்றுக்கு மேலேயுள்ள வரிகளில் முற்றாத இளநீர்களைக் கொண்ட குலைகள், இன்னும் சிறிது மேலே... சிறு சிறு குரும்பைகளாக...இன்னும்... மேலே... பாளை வெடித்து,பொன்னிறமான பல சின்னஞ் சிறு பூக்களைக் கொண்ட பூந்தண்டுகள் சிரிக்கின்றன. அவனின் ஏழு ஆண்டு உழைப்பில் அந்த இளந் தென்னை மரங்கள், பழுத்த குலைகளைச் சுமந்துகொண்டு மிகக்

www.padippakam.com



கம்பீரமாக நின்றன. அவனுக்கு தனது உழைப்பை யிட்டுப் பெருமிதம்-அந்தத் தோப்புக்கு அருகில் தனது காணியில் புதிதாக மேலும் பல தென்னங் கன்றுகளை நாட்டி, பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல் அதிகாலையில் வந்து பசளையிட்டு, நீரிறைத்து-தனது பிள்ளைகளைப் போல அவன் அந்தச் சிறிய தென்னங் கன்றுகளைத் தடவிக் கொடுக்கின்றான்.

□ □

சுறுசுறுப்புடன் கூடிய மனித உழைப்பு, மிக்க பயன் களை விளைவிக்கக் கூடிய சக்தி கொண்டது. அந்த சக்தி, நேரான வழியில், விடா முயற்சியுடன் ஒருவனால் மேற் கொள்ளப்படுகின்ற போது, அந்த உழைப்பின் பயனாக அவனுக்குச் செல்வம் சேரும்; நீரும், நிழலும், மனையும், சீரும், சிறப்பும், பேரும், புகழும் உரித்தாகும்; ‘இப் பெரு வாழ்வில்’ மகிழ்ச்சியும் பெருகும். இவை மட்டும் சேர்ந்து விட்டால் ஒருவனின் வாழ்க்கை இலட்சிய வாழ்க்கையாக அமைந்து விடுமா?— இல்லை.

இல்லாதோர் மீது இரக்கங் கொண்டு ஈய்தல் வேண்டும். அவர்கள் இரப்பதற்கு முன்பே அதனைச் செய்வது உத்தமம். தனக்கும் தனது குடும்பத்துக்கும் போதுமான செல்வத்தை வைத்துக் கொண்டு, மிகுதியை அறப்பணிகளுக்கு அவை பயன்படும் வகையில் செலவு செய்யவேண்டும். செல்வத்தை சேகரிப்பதன் நோக்கம் அவற்றைப் பதுக்கி, பாதுகாப்பாகப் பெட்டகத்தில் பூட்டி வைப்பது அல்ல; அதனைப் பிறருக்கு உதவிடப் பயன்படவேண்டும்; பணமாக, பொருளாக அல்லது இவனின் செல்வாக்கினால் செய்யக் கூடிய உதவியொன்றினை, உண்மையாக அவ்வுதவி தேவைப்படும்.

த—2

www.padippakam.com



ஒருவன் கோரினால் அதனைச் செய்வது போற்றக் கூடிய மனிதப் பண்பு; தனது செல்வத்துக்கும் கீர்த்திக்கும் கிடைத்த வாய்ப்பு எனக் கருதிச் செய்ய வேண்டும். அவ்வாறு புரிந்த உதவிக்கு கைமாறாக உதவியைப் பெற்றவன் தனக்கு என்ன செய்வான்? எதனைத் தருவான்? என எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. உதவியைப் பெற்றவனும், உதவி கிடைத்தவுடன் அதனை மறந்து விடக் கூடாது; அவ்வாறெனில் செய்ந் நன்றி கொன்ற பழி அவனைச் சூழும்; உதவி புரிந்தவனும், உதவி பெற்றவனும் மனிதர்களே; எனவே இருவரும் மனிதப் பண்பினை இழந்து விட மாட்டார்கள்.

ஒருவனிடம் மிகுந்த செல்வம் வந்து சேர்ந்தவுடன், சுற்றமும் முன்பின் தெரியாத உறவும் வலிய வந்து அவனைச் சூழ்ந்து கொள்ளும்; உயர்ந்த குணங்களைக் கொண்டவன்; மிகுந்த அழகன் எனப் பெருமையாகப் பேசப்படுகிற நிலைமை ஏற்படும் செல்வம் வற்றி விட்டால் எல்லாமே அவனை விட்டு ஒதுங்கிவிடும்; அவன் புரிந்த அறப்பணிகள் மட்டுமே அவனுடன் எஞ்சி நிற்கும்.

ஒருவன் யாரிடமாவது உதவியைப் பெற்றால், அந்த உதவியைக் கல்லில் எழுதி வைத்த எழுத்துப் போல தனது மனத்தில் என்றும் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் மக்கட் பண்பாகும்.

□ □

சூரியன் வேகமாக நடக்கத் துவங்கிவிட்டான். வெயில் உஷ்ணமாக எறிக்கத் துவங்கிவிட்டது. காலை முதல் அந்தத் தென்னந்தோப்பில்-பசளையிட்டு நீர் இறைத்து, தொடர்ந்து உழைத்ததனால் அந்தத் தென்னந் தோப்புக்காரன் களைத்துப் போய்விட்டான். நெற்றியிலும் முதுகிலும் வியர்வை, வெயில் சூட்டுக்குப்

www.padippakam.com



பிசு பிசுக்கத் துவங்கிவிட்டது. தென்னை மரமொன்றில் இருந்து, பருத்த, பதமான இளநீர் ஒன்றினை, பக்குவமாகப் பறித்து... வெட்டிப் பருகினான்.

அவன் நாவுக்கும் மனதுக்கும் அது தேவாமிர்தமாக இனித்தது!

''நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால், அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா—நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்''

—மூதுரை.

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 7

# கல்வி

"உன் எண்ணம் ஒரு ரோஜா மலராக இருந்தால் நீ ரோஜாத் தோட்டமாகவே மாறிவிடுகின்றாய் - நீ பன்னீரானால் யாவரும் தலையில் தெளித்து அச்சுகந்த மணத்தில் மகிழ்ந்து திளைப்பார்கள்.''— இது பாரசீகக் கவிதையொன்றின் கூற்று.

மனிதன் நல்ல சிந்தனைகள் கொண்டவனாக, ஒழுக்கப் பண்புகள் குடிகொண்டவனாக, அறிவுத்திறன் மிக்கவனாக, செயலாற்றலுள்ளவனாகத் திகழும் போது அவனும் அவனைச் சார்ந்த குடும்பமும் மட்டுமல்ல, சமுதாயமே உயர்வும் பயனும் பெற முடிகின்றது.

லௌகீக வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளீட்டல், குடும்பப் பொறுப்பு, குழந்தைகளின் கல்வி முதலியவற்றைக் கவனிப்பதில் ஈடுபட வேண்டியிருப்பதனால், அவசரமும், பரபரப்பும் கொண்டதாகவே அநேகருக்கு அன்றாட வாழ்வு அமைந்து விடுகின்றது. இவ்வாறான சஞ்சலத்தைப் போக்கி, உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும் அருமருந்தாகத் திகழ்பவை, மகான்களும், ஞானிகளும் அருளிய மொழிகள் அவர்களுடைய பொன்

www.padippakam.com



மொழிகள் ஒருவனுடைய மனப்பாறையில் ஒலிக்கும் போது புதிய அதிர்வுகள், புதிய ஒளிர்வுகள், புதிய தெளிவுகள் பிறக்கும்; புதிய இலட்சியங்கள் சித்திக்கும்.

நமக்கு முற்பட்ட ஞானிகளின் குரல்களை, அவர் களின் நூல்களினூடாகத்தான் நாம் கேட்க முடியும். இறவா வரம் பெற்ற நித்திய சூரியர்களாக விளங்கும் இப்பெரியார்களை நாம் போற்றிக் கொண்டிருக்கும் வரை அவர்கள் வாழ்ந்து கொண்டேயிருப்பர். அவர்களின் போதனைகளைக் கொண்ட நூல்களை அன்றாடம் சில நிமிட நேரமாவது வாசிக்கும் பழக்கத்தை ஒவ்வொரு வரும் நடைமுறை வழக்கமாகக் கொள்ள வேண்டும்.

கிருஷ்ண பரமாத்மா - மகாவீரர் - கௌதம புத்தர், இயேசு கிறிஸ்து, கொன்பூஷியஸ், முகம்மது நபி, சங்க ராச்சாரியார், சாயிபாபா இப்படி எத்தனையோ மகான்கள் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களாலேயே வாழ்க்கை பொருள் பொதிந்ததாக அமைதி நிறைந்ததாக அமைகின்றது.

நம் வளர்ச்சியும் மேம்பாடும் அவர்களது துணை கொண்டே ஏற்படுகின்றன. அவர்களுடைய இதயம் ரோஜா மலர் போன்றது. அம்மலரில் நமக்குரிய அறிவுச் சத்து தேன்குடமாக நிரம்பி நிற்கிறது. தெவிட்டாத அத்தேனைப் பருகிக் கொண்டிருந்தால் நமக்கு உடல் திண்மையுறும். உள்ளம் உரம் பெறும்; ஆன்மத் தெளிவும் ஏற்படும்.

மனித குலத்தில் இது நாள் வரை உதித்த பெரியோர் கள் நிலவும் நீரும் போல. அவர்கள் எங்கும் போய் விடவில்லை. நாம் வாசிக்கும் நூல்களிலுள்ள அவர்களின் நற்போதனைகள் மூலம் என்றும் எம்முடனேயே இருந்து வருகின்றார்கள். அதனால் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் வழக்கமாக்கிக் கொள்வோமாக!

www.padippakam.com



**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி — ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்புடைத்து.**

அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்
ஆணிமுத்துப் போன்ற மணிமொழிகளாலே
பன்னி நீ வேதங்கள் உபநிடதங்கள்
பரவுபுகழ்ப் புராணங்கள் இதிகாசங்கள்
இன்னும் பல நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்து உரைப்போம் அதனை இந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண் காலங் கொன்ற
விருந்து காண். கடவுளுக்கோர் வெற்றிகாணே.

□ □ □

www.padippakam.com

சித்திரம் 8

# தொண்டு

அரிது அரிது மானிடராகப்பிறத்தல் அரிது என மனிதப் பிறவியின் மாண்பு விதந்து பேசப்படுகின்றது. இது ஏனெனில் மனிதன் பேசத் தெரிந்தவன், சிரிக்கத் தெரிந்தவன். சிந்திக்கத் தெரிந்தவன். சிந்தனை; அறிவின் பாற்பட்டது, ஏனைய ஜீவராசிகளுக்கு ஐந்தறிவு மட்டுமே உண்டு.

மனிதனுக்கு ஆறாவதாக பகுத்தறிவும்உண்டு, நல்லது எது? தீமை தருவது யாது என்று சிந்தித்து செயற்பட வைப்பது பகுத்தறிவு. பகுத்தறியும் விவேகத்தின் அடிப்படையில் நம் வாழ்க்கை அமைய வேண்டும்.அப்பொழுது தான் நாம் பயன்மிக்கதான வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியும். விவேகம் மட்டுமே நாம் சரியான திசையில் போய்க் கொண்டிருக்கிறோமா, இல்லையா, என்பதை உணர்த்த முடியும். திசையின்றி-திக்குத் தெரியாமல் அசைந்து கொண்டிருப்பதல்ல வாழ்க்கை. செக்கு மாடு, நாள் முழுவதும் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்த போதிலும் ஒரே இடத்திலேயே அது வளைய வந்து கொண்டிருக்கிறது. மனிதன்தான் காணுவதை, கேட்பதை படிப்பவற்றை அப்படியே மனதில் ஜீரணித்துக் கொள்ளக் கூடாது. அழியக்கூடியது எது? அழியாதது எது? என ஆராய்ந்து பார்த்து, அழிவற்ற நல்ல குறிக்கோள்களை

www.padippakam.com



நாடி இலட்சியமாகக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தைச் செய்ய வேண்டும். அற்ப சுகத்தை நாடிச் சென்றால் அது அழிவில் கொண்டு போய் விட்டுவிடும். செல்வத்தைச் சேகரிப்பது ஒருவனது முழு நோக்கமாக இருக்கப்படாது; செல்வம் நல்லவற்றைச் செய்வதற்குரிய ஒரு கருவியே. செல்வத்தைக் கொண்டு என்ன செய்கிறோம் என்பது தான் முக்கியம்.

மக்களுக்கு முடிந்தளவு தொண்டு செய்ய வேண்டும். உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். இல்லையென்று ஏழ்மையுற்றிருப்பவர்கட்கு மனம் உவந்து உதவ வேண்டும்.

சான்றோர்கள் புரிகிற பெரிய பணிகளில் வலியச் சென்று துணை புரிய வேண்டும். எளிமையான படாடோபமற்ற வாழ்க்கையை வாழ்தல் வேண்டும்.

எவருக்கும் துன்பம் தராமல் இருக்க வேண்டும். இவையனைத்தும் நமக்கு முன்பு வாழ்ந்த ஞானிகள், நல்லோர்கள் அனுபவித்து உணர்ந்து உரைத்த உபதேசங்களின் திரட்டு; இவை நல்லொழுக்க அறவாழ்வுக்கான வழிகாட்டி; மனிதர்கள் தம் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய இந்த உயர் இலட்சியங்களை நோக்கி எமது வாழ்க்கைப்பயணம் அமைக்க வேண்டும். அப்போதுதான்-

கல்வி வளரும், பல காரியம் கையும் வீரியம் ஓங்கிடும்
அல்லல் ஒழியும், நல்ல ஆண்மையுண்டாகும்
அறிவு தெளிந்திடும்
சொல்லுவதெல்லாம், மறைச்சொல்லினைப்
போல பயனுள்ளதாகும்
மெய் வல்லமை தோன்றும் - தெய்வ
வாழ்க்கையுற்று இங்கு வாழ்ந்திடலாம்.

— உண்மை

www.padippakam.com

சித்திரம் 9

# சிறியர் பெரியர்

கடல் அலைகள் பால் நிறத்தில் உருண்டு திரண்டு ஓடி வந்து கரையைத் தொட்டுத் தடவி திரும்பி ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. சிறுவர் சிறுமிகள் ஓடிப் பிடிப்பதிலும், மணல் வீடு கட்டி கரைய விடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர். பெரியவர்கள் பால் மணலில் சால்வையை விரித்து கால்களை மடக்கி உட்கார்ந்து ஊர்க் கதைகளைப் பற்றிச் சமாவைக் கத்துவங்கி விட்டனர். சூரியன் கடலின் அக்கரையில் படுத்து பகல் பயணம் செய்த களைப்பைப் போக்கி ஓய்வு எடுப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கரையில் நின்று பார்க்கும்போது, கடலும் வானமும் தொலைவில் அச்கரையில் சங்கமிப்பது போன்ற ஒரு தோற்றம்; வலப்புறமும் இடப்புறமும் திரும்பினால் கூட கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு அப்பாலும் ஒரே கடல் மயம். கரையை அடுத்து, காற்றினால் கூன் விழுந்த தென்னை மரங்களின் நிறையான அணி வகுப்பு. இடையில் இரண்டு மூன்று தாழைச் செடிகள் அவற்றின் இரண்டொரு கிளைகளின் நுனியில் மகரந்தத்தை மூடிப்பிடித்தபடி விறைப்பான வெள்ளை மடல்களைக் கொண்ட தாழம்பூ. அதன் மணம் காற்றில் பரவி, இலேசாக மூக்கில் தடவிச் செல்கிறது.

www.padippakam.com



மணலில் ஏற்றியிருந்த சில வள்ளங்களை நீரில் இறக்கி சவள் வலித்து மீன்பிடிகாரரர் கடலில் புறப்படுவதை சிறுவர்கள் நூதனமாகப் பார்த்தனர். ஒரு பையனுக்கு விடாய் எடுத்து விட்டது. கடல் நீரை ஒரு கையால் கோலி வாயில் விடுகிறான். ''சீ குடிக்க முடியாதாம். ஒரே உப்பு'' —அப்படியே கொப்பளிக்கிறான்.

எஞ்சியிருந்த வள்ளத்தை கடலில்இறக்கி, மீன் பிடிக்க புறப்படுவதற்காக சிலர் வருகிறார்கள். வலைகள், கூடைகள், கட்டுச் சாதம், சுருட்டுக் கட்டு, அரிக்கன் லாம்பு, டோச் லைட், சுடுதண்ணிப் போத்தல் என... பயணத்துக்கு வள்ளம் ஏறுகின்றன.

''அட தண்ணி எடுத்து வைக்க மறந்து போச்சு'' ஒருவர் சப்புக் கொட்டுகிறார். ''புறப்பட்ட பயணம் திரும்பக் கூடாது. தண்ணி தானே? அதிலே தோண்டி எடு. இந்தா பாத்திரம்'' கடற்கரையை ஒட்டிய இடத்தில் மற்றவர் சிரட்டையால் மளமளவென மணலைத்தோண்டுகிறார். சில நிமிடத்தில் பாத்திரத்தை நிரப்பிக் கொண்டு அவர்கள் கடற் பயணம் புறப்பட்டு விட்டனர். ஒரு சிறுவன் ஓடிச் சென்று அந்தச் சிறு ஊற்றில் கையால் ஏந்திக் குடிக்கிறான்.

'அச்சாத் தண்ணீர்' என ஆச்சரியப்படுகிறான்.

''கச்சான்...கடலை உருண்டை.... சுண்டல்...சுடச் சுடச் சுண்டல்'' அவன் பலமாகக் கூலி அழைத்தும் அவனிடமிருந்து எவரும் வாங்குவதற்கு முன்வரவில்லை. பரட்டைத் தலை; சட்டை தரிக்காத மேனி; வாய் நிறைய வெற்றிலைக்குதப்பல்;கறுத்த தோற்றம்-அவனில் கவர்ச்சியில்லை: யாரும் அவனுக்கு கிட்டக்கூட வரவில்லை அவனை ஒதுக்கியே விட்டார்கள்.

அடம்பிடித்து அழுத பிள்ளைகளுக்கு ஒளிவிளக்குப் பூட்டிய வண்டியில் வந்த 'ஐஸ்கிரீம்' வாங்கிக் கொடுத்தார்கள்.

www.padippakam.com



வெள்ளைச்சட்டை, மடிப்புக்குலையாத நீண்டகாற் சட்டை, பளிச்சென்ற கவர்ச்சியான முகம், கம்பீரமான தோற்றம்; அந்த எடுப்பான தோற்றங்கொண்ட வாலிபர் கடலைப்பார்த்தபடி ஒரு ஓரமாக உட்கார்ந்து கைகளால் தாளம் போட்டு நவீன பாட்டுக்களை இனிய குரலில் பாடத்துவங்கி விட்டார். சிறுவர் சிறுமிகள் அவரைச் சூழ்ந்திருந்து தலையாட்டி ஆட்டி மெய்மறந்து போனார்கள். இருட்டியதைக் கூட எவரும் கவனிக்கவே யில்லை, சிறியவர்களுக்கு பாட்டு ரசனை; பெரியவர் களுக்கு ஊர்க்கதையில் ருசி. வெளிச்சமில்லாத அந்தக் கடற்கரையில் அந்தப் பாட்டுக்காரன், சிறுமி ஒருத்தியின் சங்கிலியை உருவிக் கொண்டு ஓடத்துவங்கி விட்டான். பிள்ளைகளின் அழுகைக்குரல் கேட்ட பெரியவர்கள் அவனைத் துரத்திச் செல்ல முயற்சிக்க முன்பே அவன் இருளைக் கிழித்து கொண்டு ஓடி விட்டான். சுண்டல் தட்டை ஒரு புறம் வீசி விட்டு அந்தப் பரட்டைத்தலைக் கறுப்புச் சிறுவன் அவனைக் கலைத்துச் சென்றான். காற் சட்டைக்காரனை மடக்கி சங்கிலியை மீட்டு வந்தபோது பெரியவர்களின் வாய் நன்றியால் குழறியது.

''நீ நல்ல பிள்ளையப்பா. உன்னை அருவருத்து நாங்கள் ஒதுக்கினது மடத்தனம். இத்தனை வயசாகியும் எங்களால் ஆட்களை மட்டிட முடியாமல் போச்சே.''—

அந்தச் சிறுமியின் தகப்பன் மகளை அணைத்துக் கூட்டிக் கொண்டு பெருந்தெருவைக் கடந்து,ஒழுங்கையில் இறங்கி வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

குப்பென்ற ஒரு நறுமணம் அந்தச் சந்தியில் வீசியது.

''என்னப்பா...சோக்கான வாசனையாயிருக்கு'' சிறுமி கேட்டாள்.

www.padippakam.com



''அது மகிழம்பு வாசனை, வேலிப் பக்கமாக மகிழ மரம் நிற்கிறது. அதில் வெள்ளையாக சின்னச் சின்னப் பூக்கள் என்றாலும் பிரமாதமான வாசனை தரும்.'' -அவளுக்கு விளக்கமாக அப்பா சொன்னார்.

**''மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்**
**உடல் சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது**
**மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூரல்**
**உண்ணீரும் ஆகி விடும்.''**

**—மூதுரை**

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 10

# இன்சொல்

சொற்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. ஒருவனை மகிழ வைப்பதற்கும் அதே மாதிரி அவனை துன்பத்தில் துவழ வைப்பதற்கும் சொற்களைப் பயன்படுத்த இயலும்.

கல்வி என்பது சொல்லினை வாகனமாகக் கொண்டே பரவுகிறது. சொல்லின் வன்மையினால், மக்கள் தலைவர்கள் உருவாகினார்கள். சொற்களின் மூலம் உணர்ச்சிப் புயல்களை உருவாக்க முடியும். போரும் அமைதியும், அவற்றுக்கு முன்னர் பாவிக்கப்படும் சம்பாஷைணகளின் விளைவாகவே உருவாகின்றன. சாந்தமும் அமைதியும் பயன்படுத்தப்படும் இனிமையும் இங்கிதத் தன்மையுங் கொண்ட சொற்களினால் பிறக்கின்றன. வாழ்வும் வளமும் வாழ்த்தும் மங்களச் சொற்களின் மகிமையினால் ஏற்படுகின்றன. நோயைக்கூட மாற்றும் மந்திர சக்தியைக்கொண்டது சொல்.

சபையில் எழுந்து நின்று, அச்சமும் கூச்சமும் இன்றி நான்கு வரி பேசத் தெரியாத நெடுமரங்கள் சமூகத்தில் நிறையவுண்டு. சிந்தனைத் திறனும் வீண் படாடோபமும் இல்லாமல் எளிமையாக, அழகாக, அந்தரங்க சுத்தி வெளிப்படப் பேசக் கூடிய நாகரிகம் கூட இல்லாமல்,

www.padippakam.com



பட்டங்கள் பலவற்றை வாங்கிக் குவித்துள்ள பலரையும் சமுதாயம் கண்டிருக்கிறது.

அதே மாதிரி, பலத்த தொனியில், பெரிய வாய்ச்சவடால் அடித்து, பெரிய அறிவாளிகளைக் கூட ஏமாற்றி விடும் கயவர்கள் கூட இச்சமுதாயத்தில் இருக்கிறார்கள்.

உண்டு என்பதை இல்லை என்றும் இல்லையென்பதை உண்டு என்றும் சாதித்து திரித்து விடுவதும் சொல்வன்மையினாலேதான். பெலியல் என்னும் பெயர் கொண்ட ஒருவன் சாத்தானின் முக்கியமான கூட்டாளிகளில் ஒருவன். அவன் தேனில் குழைத்தது போன்ற சொற்களால் சம்பாஷிக்கத் தெரிந்தவன். ஆனால் உண்மையில் அத்தனையும் விஷமாகவே இருக்கும். சத்தியத்தைத் திரித்துக் கூறி கேட்போரின் புத்தியைக் குழப்பியடிப்பதே அக்கொடியவனுக்கு இருந்த ஒப்பற்ற திறமை.

சொல்லாற்றலை தீமையை விளைவிக்கப் பயன்படுத்தாமல், நன்மையை, நலத்தை ஓங்கச் செய்வதற்கே பயன்படுத்தவேண்டும்.

இனிய சொற்களையே நாம் என்றும் பயன்படுத்த வேண்டும். பழுத்த கனியிருக்க கசக்கும் காயை நாம் ஏன் கவர வேண்டும்?

இனிய சொற்களால் இனிய சூழ்நிலைகளை உருவாக்கலாம். இனிய சூழ்நிலையில் இனிய விளைவுகள் முகிழ்க்கும். பிறகு அமைதியும் மகிழ்வும் பிரவகிக்கும்.

பேசுகின்ற ஆற்றலைப் பெற்றிருப்பதினால் பெரும் உன்னத பிறவியாக அமைந்தது மனிதப் பிறவி. நினைத்ததைப் பிறருக்கு உணர்த்த முடியாதவர்கள் மணமற்ற மலர் போன்றவர்கள்.

இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையாதார்
இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன் சொலால் என்றும் மகிழ்ந்து' — குறள்

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 11

# குற்றமில் வாழ்வு

அதிகாலை வேளை. புள்ளினம் மகிழ்ச்சி கானம் இசைக்கிறது. விலங்கினம் விழித்தெழுந்து அசையத் தொடங்கிவிட்டது. மலர்கள் கட்டவிழ்ந்து நறுமணம் பரப்புகின்றன.

மாதா கோவிலின் மணி இனிய நாதத்தை ஒலிக் கிறது...

பன்சாலைகளிலும் விகாரைகளிலுமிருந்து எழும் பிரித்தொலி காற்றில் மிதக்கிறது.

பள்ளிவாசல்களிலிருந்து புனித தொழுகைக்கான பாங்கொலி அழைக்கிறது.

சைவ ஆலயங்களில் சுப்ரபாதமும், திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களும் இனிய இசையோடு எழுந்து பரவி வருகின்றன. சூரியக் குழந்தை கண் விழித்து விட்ட போதிலும் இன்னும் சோம்பல் முறித்து படுக்கையை விட்டு எழும்பவில்லை. ஆனால் ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் அந்தச் சிறுமி நித்திரை விட்டு எழுந்து முற்றத்தில் நின்று முகம் கழுவத் தொடங்கி விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



பின்னிரவுப் பிறைச் சந்திரன் குளிர் நிலவை அள்ளித் தெளித்தவாறு நடு வானத்தில் தவழ்ந்து கொண்டிருக் கிறான்...

வேலைக்குச் செல்ல வேண்டிய கணவனுக்கும், பாட சாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கும் கொடுத்தனுப்பு வதற்காக குடும்பத் தலைவி சுறுசுறுப்பாக சமையலை துவங்கி விட்டாள். அவளுக்குத் துணையாக அடுக்களை யில் அவள் கணவன். படிக்கும் மேசையில் பிள்ளைகள்.

''அப்பா...அம்மா! ஒளவைப்பாட்டி இண்டைக்கும் ஆகாயத்து நிலவிலே இருக்கிறா''— அந்தச் சிறுமியின் முகத்தில் அதைக் கண்டுபிடித்த மலர்ச்சி: சிரிப்பு—

சந்திரனில் மனிதன் காலடி வைத்துப் பல விஞ்ஞான கண்டு பிடிப்புகளைச் சாதித்து விட்ட போதிலும், மழலைகள் மனத்தில் காலங்காலமாக இந்த நம்பிக்கை மறையவேயில்லை.

சந்திரனின் நடுப்பகுதிப் பள்ளத்தில் கதிரவனின் ஒளிபடாததால் அப்பகுதியில் ஒரு கருமை. அது உலகம் முழுவதும் தெரிகிறது; சிறுவர்கள் கூடப் பார்த்து சிரிக்கும் வகையில் இந்தக் கருமை தெரிகிறது;

அறிவை இழந்து விட்டால், வாழ்க்கையில் வெறுமை யும் கருமையும் ஏற்படும். அன்பும் அறிவும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவை. அதனால்தான் 'அன்பே தெய்வம் அறிவே தெய்வம்' என்ற உண்மையை ஆன்றோர்கள் அழுத்திக் கூறி வைத்தனர். அன்பின் வழியில் இயங்குகின்ற — உடலே உயிரோடு கூடிய உடலாகும். அன்புடைமை உள்ளவரிடம் அதனை யொட்டிய மற்றும் தன்மைகளான அடக்கம், ஒழுக்கம், பொறை, அருள் என்பவை தாமாகச் சேரும். அறிவு ஏற்படாமல் காக்கும் கருவி அறிவு. அறிவுடையவர் எல்லாம் உடையவர். அறிவுக்குத் துணையாக நிற்பது

www.padippakam.com



மனம். சிந்திக்கும் திறம் கொண்டது மனம் மனிதனுக்கு மட்டுமே அமைந்தது மனம். மனம் மனிதனை உயர்த்தவும் வீழ்த்தவும் வல்லது. ஆக்கவும் அழிக்கவும் கூடியது. மனம் குரங்கு போன்றது; நல்லவற்றை விட அல்லாதவற்றையே கூடுதலாகவும் விரைவாகவும் அது எண்ணும். ஐம்பொறிகளின் வழியே சென்று தீமைகள் புரியும் ஆற்றல் அதற்கு அதிகமாக உண்டு.

அறிவினால் மனத்தை அடக்கி கட்டுப்படுத்தாமல் அது போகிற போக்குக்கு விட்டுவிட்டால், அது வீழ்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று மனிதனைப் படுகுழியில் வீழ்த்தி மாறாத களங்கத்தை — வாழ்க்கையில் ஏற்படுத்தி விடும்.

நீதி, தருமம், நேர்மை, பொறை, கல்வி, தயை, செல்வம், பண்பு, ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் வாய்க்கப் பெற்றுப் புகழுடன் நல்வாழ்க்கை நடத்தும் ஒருவன், அறிவினால் மனத்தைக் கட்டுப்படுத்தி சரியான இலட்சியப்பாதையை நோக்கி வாழ்க்கையைச் செலுத்தத் தவறுவானேயானால், அவன் குற்றம் இழைக்க வேண்டி நேரிடும். பெயருக்குக் கரிபூசிக் கொள்ள வேண்டியேற்படும். பிரகாசமான புகழுடன் அமைந்த அவன் வாழ்க்கையில், சிறிது களங்கம் ஏற்படினும் அது மிகத் துலாம்பாரமாக வெளியுலகத்துக்குத் தெரியும். அதனால் அவன் வருந்த நேரிடும்; துன்பப்பட வேண்டி நேரிடும். இதனை,

**''அங்கண் விசும்பில் அகல் நிலாப் பாரிக்கும்**
**திங்களும் சான்றோரும் ஒப்பர் மன்—திங்கள்**
**மறு ஆற்றும் சான்றோர் அஃது ஆற்றார் தெருமருந்து**
**தேய்வர் ஒரு மாசு உறின்.''**

என நாலடியாரில் சமணமுனிவர் துலாம்பாரமாகச் சித்தரித்திருக்கிறார்.

☐ ☐ ☐

சித்—3

www.padippakam.com

# சித்திரம் 12

# அடக்கம்

அது பரந்த வயல் வெளி: பார்க்கும் இடம் எல்லாம் பச்சைப் பசேல் என்ற நெற் பயிர்கள். வயல் நடுவிலே ஒரு குளம்; மழைக்காலத்தில் வயல்களை நிரப்பி வழியும் நீர் அதில் தங்கி நிற்கும். கோடையில் கூட அது வற்றுவ தில்லை.

இன்னும் சில மணித்துளிகளில், இளஞாயிறு எழிற் கோலத்துடன் எழுந்து வரத் தயாராகின்றான். மங்கல மங்கையர் வேளையுடன் எழுந்து, குளித்து முழுகி, வாசல் பெருக்கி நீர் தெளித்து, விதவிதமான கோலங்கள் வகை வகையான வண்ணங்களில் வரைந்து சூரியனை வரவேற்று நமஸ்கரிக்கத் தயாராகிறார்கள்.

தாமரைப் பெண் தன் காதலனைக் காணப் போகிற மனப் பூரிப்பில் கை மொட்டவிழ்ந்து, கன்னத்தை நாணம் சிவக்க வைக்க ஆவலோடு எட்டிப் பார்க்கிறாள். அந்த வயற்குளத்தில் நிறைந்துள்ள செந்தாமரை மொட்டுக்கள் கட்டவிழ்ந்து விரிகின்றன.

அருகிலுள்ள கோவிலிலிருந்து பூபாள ராகத்தில் நாதஸ்வரம். கோவிலுக்குச்செல்லும் பக்தர்கள் கால்கழுவ

www.padippakam.com



குளத்து நீரில் கால்வைக்கும் போது ஆமைகள் கூட்டிற்குள் அடங்கி ஒடுங்கிக்கொள்கின்றன. பொறாமை, கல்லாமை, அறியாமை என்பவை பக்தனின் மனத்திலிருந்து ஒதுங்கி அவன் மனம் இறைவன் மீது ஏகாக்கிர சிந்தையாகிறது. பக்தனின் மனக்குளத்து ஆமைகள் மட்டு மல்ல அந்த வயற் குளத்தில் வாழும் ஆமைகள் கூட ஆளரவம் உணர்ந்து தமது உறுப்புக்களை பாதுகாப்பான வலிமை மிக்க ஒட்டிற்குள் சுருக்கி அடக்கிக் கொள்ளுகின்றன. தன்னை அவர்கள் பார்த்து விட்டால் அவர்களிடமிருந்து தமக்கு ஆபத்துஏற்படுமே என்ற பயம் அந்த ஆமைகளுக்கு. ஆமைகள் நீரில் மட்டுமல்ல, நிலத்திலும் வாழும் இயல்பைக் கொண்டவை. தமது கால்களையும், முகத்தையும் பகைவரால் துன்பம் வரும் என அச்சமடையும் வேளைகளில் ஒட்டிற்குள் சுருக்கி உயிரற்றவை போன்ற அடக்கத்தில் அவை ஒடுங்கிக் கிடக்கும். உறங்கும் போதும் அவை அப்படியே தோற்றம் தந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும். துன்பம் கழிந்த பின்பும், உடல் இயங்கத் துவங்கும் போதும் தமது உறுப்புக்களை வெளியே நீட்டி இயங்க ஆரம்பித்துவிடும்.

மனிதன் தனது வாழ்க்கையை துன்பம் அற்றதாக- இடர்கள் இல்லாததாக அமைத்துக் கொள்வதற்கு, இந்த ஆமைகளின் வாழ்க்கைமுறை நல்ல படிப்பினையாக உள்ளது.

ஐம்புலன்களை மனிதன் அலையவிடக்கூடாது. ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஒலி என்பவை இலகுவில் தீய வழிக்கு இழுக்கக் கூடியவை; இட்டுச் செல்லக் கூடியவை. அதனால் இவற்றை அடக்கி, நல்லபாதைக்கு நடத்தி நாம் வாழப்பழகினால் துன்பம் நம்மை அண்டமாட்டாது. துயரம் நம்மை அலைக்கழிக்கமாட்டது. அடக்கம் உடைமையை நாம் கைக்கொண்டு ஒழுகினோமானால், மனித வாழ்வின் பலனை முழுமையாகப் பெறமுடியும்.

www.padippakam.com



'ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து'—என்பது வள்ளுவர் சொல்லும் வளமார் வாழ்க்கை வழி.

மனத்தையும் ஐம்பொறிகளையும் செவ்விய நெறியிற் செலுத்தி, பழிபாவங்களுக்கு இடங்கொடாமல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அறிய வேண்டுவனவற்றை அறிந்து, அடங்கி, அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி, செய்ய வேண்டியவற்றை, உலகத்தார் போற்றும் வகையில் நிறைவேற்றி அவாவை அறுத்து ஆன்றோர் அறிவுறுத்திய நெறிகளில் மனதைச் செலுத்தி வாழ்வதே நமக்குரிய கடமையும் ஒழுக்கமுமாகும்.

☐ ☐ ☐

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 13

# முதுமையில் அறம்

பகல்-ஒளி நிறைந்தது; பிரகாசமானது. இரவு-இருள் கவிந்தது. கரிய இருட்டுமயமானது. ஒளியின் முரண்பட்ட நிலை இருள். முரண்பாடுகளான இருள் நிறைந்த இரவும், பிரகாசமான பகலும் இணைந்து தான் ஒரு முழுநாள் அமைகிறது. வாழ்க்கை முழுவாழ்க்கையாகப் பரிணமிப் பதற்கு வலிமை கொண்ட ஆண்மையும் மென்மைமிக்க பெண்மையும் இணையவேண்டும். பண்பு, கல்வி, வயது முதலியவற்றால் ஒத்த ஒருவனும் ஒருத்தியும் கணவன் மனைவியாக இணைந்து, காதல் மிக்கவராகி மனித இயல் புக்கும் அறநெறிகளுக்கும் ஊறு ஏற்படாமல் இல்லறத்துக் குரிய அனைத்து நெறிகளையும் கடைப்பிடித்து இல் வாழ்க்கையை நடத்தும் போது அவர்கள் பணப் பெருமை பட்டம் பதவிகளின் சிறப்புக் கொண்டோர் போன்றவர் களுக்கும் மேலானவர்களாகப் போற்றப்படுவர்.

அறநெறி தழைத்து ஓங்குவதற்கு இல்லறநெறியில் இணைந்து வாழ்வோர் இன்றியமையாதவர்கள். கணவன் மனைவி ஆகியோர் ஒருவர் மீது ஒருவர் இனிய காதல் கொண்டவர்களாக அவர்கள் இருவரும் தம்மைச்சார்ந் தோர்பால் அன்பு செலுத்துபவர்களாக விளங்கவேண்டும்.

www.padippakam.com



இல்லறத்தின் பண்பு அன்பு செலுத்துதல்; அதன் பயன், அறம் செய்தல். இதனை,

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது" என வள்ளுவப் பெருந்தகை

இரத்தினச் சுருக்கமாக இருவரிகளிலே இறுக்கமாகச் சொல்லியுள்ளார்.

இல்லறத்தை இனிதே நடத்தப் பொருள் வேண்டும். அப்பொருள் நேர்மையாக ஈட்டப்படவேண்டும். ஈட்டிய செல்வத்தை தமக்கெனப்பதுக்கி குவித்து வைக்காமல் பல்லுயிர்களும் அதனால் அடையக்கூடிய வகையில் பயன் படுத்த வேண்டும்.

துறவிகள், உணவுக்கு வழியற்ற ஏழைகள், ஊரை விட்டு வந்த அநாதைகள் ஆகிய மூவகையினருக்கும் உதவும் சமுதாயப் பொறுப்பு இல்வாழ்வானுக்கு உண்டு எனவலியுறுத்திச் சொல்லும் வள்ளுவர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர் சுற்றத்தினர் ஆகியோருக்கும் உதவுவதுடன், இல்வாழ்வான் தன்னையும் தன் குடும்பத் தையும் பேணிக்கொள்ள வேண்டும் என்ற கடமையை இடித்துச் சுட்டிக்காட்டியிருக்கிறான் என்பதை மன்ப தையில் வாழும் மக்கள் மனங் கொள்ள மறக்கப்படாது. இல்வாழ்க்கையிலிருப்போர், அதற்கு வெளியே இருப்பவர் களுக்கு உதவிபுரியாவிடில், பசிக்கொடுமையால் அவர்கள் பல குற்றங்களைச் செய்ய நேரிடும்; அதனால் சமுதாயத் துக்குப்பல தீம்புகள் விளையும் சமுதாயத்தில் தீம்புகள் நிகழாமல் தடுப்பதற்கு உதவுகிற பொறுப்பு இல்வாழ்க் கையிலிருப்பவனைச் சார்ந்தது.

மனித வாழ்க்கை இல்லறம், துறவறம் என இருநிலை களைக் கொண்டது. நாட்டைத் துறந்து, காட்டிற்கு ஓடி கடுந்தவம் புரிவதோ, சமுதாயத்தை விட்டு விலகி வாழு வதோ அல்ல துறவறம். இல்லறத்தின் வளர்ச்சி நிலைதான் துறவறம். குறிப்பிட்ட வயசுக்குப்பின், பற்றுக்

www.padippakam.com



களைத் துறந்து இறை சிந்தையோடு, முடிந்தளவு சமுதாயத் தொண்டுகள் புரிந்து, தனக்கென வாழாது பிறர்க்கென வாழுவதுதான் துறவறம். தமது முதிர்ந்த வயசில் இவ்வாறு சமுதாயத் தொண்டு புரிபவர்கள் மதிக் கப்படுகிறார்கள். மரியாதையோடு கவனிக்கப்படு கிறார்கள். பெரியாரைப் பேணுதல், போஷித்தல், விசேட நாள்களில் அவர்களை வணங்கி ஆசிபெறுதல், ஆதரவாக அவர்களுக்கு வேண்டிய தொண்டு புரிதல் முதலியவை ஈழை நாடுகளின் கலாசாரத்தின் விழுமியங்களாக இன்றும் விளங்குகின்றன.

கணவனும் மனைவியும் இன்பந்துய்த்து காமம் அடங்கிய முதுமைக்காலத்தில், நல்ல மக்களோடும் அன்புக்குரிய சுற்றத்தினரோடும் இருந்து சமுதாயத் தொண்டாற்றல் பெறற்கரிய பிறவிப்பயனாகும். தொல் காப்பியர் கூறும் தமிழ் நெறியும் இதுவே.

**காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.**

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 14.

# பேரறிவு

பொழுது புலருகின்ற வேளை. பறவைகளும் விலங்குகளும் விழித்து எழுந்து அசைவதற்கு முன்னரே, அந்த விவசாயிகள் சுறுசுறுப்பாக இயங்கத் துவங்கி விட்டார்கள். அது வானம் பார்த்த பூமி; இளங் காலையிலேயே கிணற்றிலிருந்து நீர் இறைத்துப் பாய்ச்சு பவர்கள் ஒருபுறம்; ஏர் பூட்டி உழுபவர்கள் ஒருபுறம்; மண்வெட்டியினால் மண்ணைப் பதப்படுத்துபவர்கள் இன்னொருபுறம். உலக மக்கள் உயிர் வாழ்வதற்கான உணவு தருபவர்கள் விவசாய பெருமக்களே. பசியால் மக்கள் வாடாமல் இருப்பதற்கான பாசன விளைச்சலைத் தவறாது வழங்க அவர்கள் தயங்காது இயங்குபவர்கள்.

நல்ல விளைச்சலைப் பெற்று சமூகத்துக்கு வழங்கு வதற்காக பயிர்கள் வாடாமல் செழிப்போடு இருக்க, கவனிக்க வேண்டியதும் விவசாயின் கடமை. அதனால் தான் கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராமல் அதிகாலைப் பனிக் குளிரையும் பொருட்படுத்தாமல் அத்தனை கடும் உழைப்பு.

கிணற்றிலிருந்து துலாவினால் அள்ளி அள்ளி இறைக்கப்படும் தண்ணென்ற நீர், நீண்ட வாய்க்கால்

www.padippakam.com



வழியே பாய்ந்தோடி பயிர்களின் கால்களை நனைக்கிறது. வாடிய பயிர்கள் தலை நிமிர்ந்து சிரிக்கின்றன. நீர் வாய்க்கால் வழியே ஓடி ஓடி ஒரே சீராகப் போய்க் கொண்டிருக்கிறது. துலாக் கொடியைப் பிடித்திருக்கின்ற விவசாயியின் கைகள் ஓய்வொழிச்சலின்றி இயந்திர கதியில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன: அந்த அதிகாலையில் கூட அவன் உடம்பு வியர்வையில் குழிக்கிறது. வாய்க்காலில் பயிர்களை நோக்கி தண்ணீர் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

சூரியன் எழுவதற்கு முன்பே முழுக்கிணறும் வற்றி விட்டது! துளி கூட நீரில்லை — பாதிப் பயிர்களுக்கு இன்னும் நீர் பாய்ச்சப்படவேண்டும். விவசாயியின் மனச்சோர்வடையவில்லை. காலை 'உணவை உட்கொண்டு, சிறிது நேரம் உடற்சோர்வை ஆற்றிக் கொள்வதற்கிடையில் அக்கிணற்றில் மீண்டும் நீர் திரண்டு விடும். என்பது அவன் அனுபவத்தில் கண்ட உண்மை. இறைக்க இறைக்க ஊறும் இயல்பைக் கொண்டது கிணறு. இறைக்காமல், பயன் படுத்தாமல் விட்டால் அது பாசிபிடித்துப் பாழுங்கிணறாகவே மாறிவிடும்.

கல்வி ஒருவனுக்கு அறிவைத் தருகின்றது. ஒழுக்கப் பண்புகளை வளர்க்கின்றது; சமுதாயத்தில் உன்னத பிரஜையாக வாழ்வதற்கான தகைமைகளை ஊட்டுகின்றது. ஒருவன் பெற்ற கல்விச் செல்வம் காலத்தால் அழிவதில்லை. அள்ளி அள்ளிக் கொடுப்பதனால் செலவழிவதுமில்லை. கள்வர்களினால் கவரப்படக் கூடியதுமல்ல. இந்தச் சிறப்புக்களைக் கொண்ட கல்வி ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இன்றியமையாதது; ஒவ்வொரு மனிதனும் கல்வி அறிவு பெறும்போது அவன் சார்ந்துள்ள சமுதாயமே கல்வி அறிவு பெற்ற சமுதாயமாக உயர்வு பெறுகின்றது.

ஒருவன் பெறுகின்ற கல்வி ஒளிக்குச் சமமானது. அவனது வாழ்க்கைப் பயண வழியின் இருட்டை

www.padippakam.com



போக்குவதாக மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் திசை காட்டுவதாக, அவர் வாழ்க்கையிலும் ஒளியூட்டுவதாக அத்தக் கல்வி பயனளிக்க வேண்டும். கல்வியால் பெற்ற அறிவை பிறருக்குக் கற்பித்தல், பிரசங்கித்தல், எழுத் தாக்கங்களை இயற்றிப் பரப்புதல் எனப்பயன் படுத்த வேண்டும். அப்போது தான் அது வளரும்; மேலும் கிளர்ந்து உயர்ந்து வாழும். வழங்காமல் தன்னிடமே தேக்கி வைத்தால் அறிவின் வளர்ச்சி தடைப்படும்; தன்னல நாற்றமடிக்கும் நீர் குட்டைக்கு நிகராக அது ஆகிவிடும்.

**அறுக்கச் சுரக்கும் பூம்பாளை**
**அணைக்கச் சுரக்கும் அன்பு வெள்ளம்**
**கறக்கச் சுரக்கும் ஆவின் பால்**
**கற்கச் சுரக்கும் பேரறிவு**
**இறைக்கச் சுரக்கும் மணற்கேணி**
**ஈயச் சுரக்கும் பெருஞ்செல்வம்**
**துறக்கச் சுரக்கும் ஞான வெள்ளம்**
**தோன்றத் தோன்றச் சுகமாமே.**

என்ற இப்பழைய பாடல் தத்துவ விரிப்பாகத் தரிசனந் தருகின்றது.

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 15.

# சமுதாய உணர்வு

பரந்த சமுத்திரம்; அதில் மிக உயரேயுள்ள வானத்தின் நீல வண்ணம் அமைதியும் அழகும் கொண்டு பிரதிபலிக்கும். மாட்சி மிக்க காட்சி; காற்று வீசுகின்றது. கடல் தாயின் மடியில் தவழும் குழந்தைகளாக அலைகள்; காற்றின் வேகம் அதிகரிக்கிறது; அலைகள் எழுந்து தலை கவிழ்ந்து, நாணிக் கோணி, மடங்கி மடிந்து, வெண்ணுரை தரித்து கரையை நோக்கி ஆடி வரும் அழகு அக்காலை வேளையில் மனதுக்கு ரம்மியம் தருகின்றது.

அக்கடற்கரையோரத்தில் உட்கார்ந்து இக்காட்சிகளில் மனம் லயிக்காமல், உலக மக்களின் க்ஷேமத்துக்காக அந்த உதய வேளையில் உலகத்தின் உயர்வையே தமது இதயத்தில் வைத்து நேசிக்கும் ஞானப் பெருஞ்செல்வர். இவர்போல எத்தனை மகான்கள் எமக்காக உலக மக்களுக்காக காடுகளில், மலைகளில், நதிக்கரைகளில், மடங்களில், தபோவனங்களில், தரும நிலையங்களில், தமக்குரியாராகவன்றி பிறர்க்குரியராகப் பணி புரியும் சான்றோராக விளங்குகின்றார்கள். இலைமறை

www.padippakam.com



காயாக விளங்கும் இப்பெரும் ஞானச் செல்வர்கள் இங்கு இருப்பதனால்தான் இவ்வுலகம் வாழுகின்றது.

இச்சான்றோர்கள் தன்னலம் அற்றவர்கள். சாவைத் தடுக்கவல்ல இந்திரலோகத்துத் தேவாமிர்தம் கிடைத்தாலும், தமக்கு அது பயனுள்ளது, இனியது என எண்ணி, வேறு எவர்க்கும் தெரியாமல் தாமே தனியாக ஒளிந்திருந்து உண்டு விடமாட்டார்கள்.

கோபத்தை நீக்கிக் குணத்தில் கோபுரமாக இச்சான்றோர்கள் விளங்கும் தன்மையினர்.

அறிவுக் குறைவினால் தொட்டதற்கெல்லாம் உலக மக்கள் அஞ்சுவது போல, இவர்கள் பயப்பட்டுச் செயலாற்றாமல் சோம்பியிருப்பதில்லை. பெருமையும் பயனும் தரவல்ல செயல்களை இவர்கள் தம் உயிரையுங் கொடுத்துச் செய்து முடிக்க வல்லவர்கள். உலகம் முழுவதுமே பரிசாக வழங்கப்படுவதாக இருந்தாலும் நல்லோர் பழிப்பவற்றை செய்யத் துணிய மாட்டார்கள்.

சோராமல், துவழாமல், தமக்கன்றி - தமது சமுதாயத்துக்காகப் பணி புரிகின்றவலிமையைக்கொண்ட சான்றோர்கள், இவ்வுலகில் இருப்பதினால்தான் இந்த உலகம் நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறது.

உண்டு அல் அம்ம! இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்;
துஞ்சலும் இவர் பிறர் அஞ்சுவது அஞ்சி!
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர், அயர்விலர்.
அன்னமாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலு நர் உண்மையானே!

www.padippakam.com



சமுதாய உணர்வோடு சமுதாயத்துக்காக தம் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்து விடும் அன்புச்சுடர்களாகிய அப்பெரியோர்களை இனங்கண்டு நாம் துணைக் கொள்ளவேண்டும். அவர்கள் காட்டும் வழியில் - அவர்களின் அருள் ஒளியில் எமது வாழ்க்கைப் பயணம் இடையூறு இன்றி அமையுமென்பதில் ஐயமில்லை.

**பொய்யுறு மாயையைப் பொய் எனக்கொண்டு**
**புலன்களை வெட்டிப் புறத்தினில் எறிந்து**
**ஐயுறல் இன்றி களித்திருப்பார் அவர்,**
**இத் தரை மீதினிலே இந்த நாளினில்**
**இப்பொழுதே முக்தி சேர்ந்திட நாடி**
**சுத்த அறிவு நிலையில் களிப்பவர்**
**தூயவராம் என்று இங்கு ஊதடா சங்கம்.**

□ □ □

www.padippakam.com

## சித்திரம் 16.

# அறிவுரை

நறுமலர்கள் கொண்டு இயற்றப்பட்ட மணவறை. அதில் அமர்ந்திருக்கும் மணமகள் முகத்திலே நாணம். செம்மையைத் தீட்டிவிட அவள் நிமிராமல் தலை குனிந் திருக்கிறாள். தலைப்பாகை, கழுத்தில் உத்தரீயம், மலர் மாலைகள் என மணமகன் எடுப்பான தோற்றத்தில் காட்சி தருகிறான். நாதஸ்வரம் வாரி வழங்கும் மங்கல இசையுடன் வேதியரின் மந்திர ஒலியும் சேர்ந்து செவிக்கு இனிமை சேர்க்கிறது. ஓமப்புகையும் ஊதுபத்தி சாம்பி ராணிப் புகையும் கலந்து நறுமணம் பரப்புகின்றன.

மங்கல நாணினை எடுத்து மஞ்சள் தடவி, அதனை மணமகன் கையிலே குருக்கள் கொடுக்கிறார். கெட்டி மேளத்தின் முழக்கம் அவள் கழுத்திலே தாலி ஏறுகின் றது. பெரியோர், சுற்றம், நட்பு என்பவை மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அட்சதையும் மலரும் தூவி அந்த இளஞ் சிட்டுக்களை வாழ்த்துகிறார்கள்.

''பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!—மங்கல விழாவில் இதய பூர்வமாக வாழ்த்தப் பயன்படுத்தப்படும் இவ்வாக்கியத்தின் கருத்து என்ன?— அவர்கள் குறிப்பிடும் அந்தப் பதினாறும் யாவை?—

www.padippakam.com



அந்த இளஞ்சோடி இளமையைப் பேணவேண்டும்; நோயற்று ஆரோக்கியமாக வாழவேண்டும்; கல்வியைக் கைவிடாமல் விருத்தி செய்ய வேண்டும்; கல்விக்குப் பயனாகிய அறிவின் மூலம் நல்லது எது? கூடாதது? எது என்பதைப் பகுததுணர்ந்து நல்ல நெறியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்; இருவரும் அன்புடன் கூடி இன்பந்துய்த்து நன்மக்களைப் பெறவேண்டும்; வாழ்க்கைக்குத் தேனவயானசெல்வத்தை அறவழியில் சேர்க்கவேண்டும்; உணவுக்குத் தேவையான தானியத் தைச் சேமிக்கவேண்டும்; இடுக்கண் வருகின்ற போது, அதனைக்கண்டு மனம் துவழாமல், அதற்கு முகம் கொடுத்து அதனை வெல்லுகின்ற துணிவும் மனோவலிமையும் உள்ளவர்களாக விளங்க வேண்டும்; அவர்கள் மேற்கொள்ளுகின்ற கருமங் களில் வெற்றி சித்திக்கவேண்டும்; அவர்கள் சிறந்த பண்பினாலும் சீரிய ஒழுக்கத்தினாலும் பெருமையும் புகழும் பெறவேண்டும். நீண்ட ஆயுள், நற்பேறு, நற்குடிப் பிறப்பு என்பவையெல்லாம் அவர்களுக்கு கிடைக்கப் பெறவேண்டும் என்பதே அந்த வாழ்த்து. வாக்கியத்தில் குறிப்பிடப்படும் பதினாறு செல்வங்கள்.

இந்தப் பதினாறு செல்வங்களையும் விட இன்னும் ஒரு செல்வம் இருக்கிறதாம். அது பதினாறு செல்வங் களையும் விடச்சிறந்தது; உயர்ந்தது; ஒப்பில்லாதது; உன்னதமானது என வள்ளுவர் செப்புகின்றார். அச் செல்வம்தான் யாது?

> **''செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்—அச்செல்வம்**
> **செல்வத்துள் எல்லாந் தலை.''**

பெரியோர்களின் அறவுரை; கல்விமான்களின் அறிவுரை; இதமான இன்னிசை—இவற்றை செவியால் கேட்கும் போது எமது அறிவு வளரும்; உணர்வு பெருகும்; உள்ளம் குளிரும்; ஏன்? இவை உயிரையும் தொடவல்லவை. அத னால் இதனைச் செல்வத்துள் செல்வம்செவிச் செல்வம் என வள்ளுவர் சிறப்பித்துச் சொல்லி இருக்க வேண்டும்.

www.padippakam.com



இசைக்கு அசைக்கும் சக்தி—உள்ளத்தை உருக்கும் சக்தி உண்டு. இனிமையான இசையைக் கேட்கும் தாவரங்கள் வளர்கின்றன என விஞ்ஞானிகள் ஆதாரத்துடன் கூறுகின்றனர். மகுடி இசைக்கு மயங்கி பாம்பு படம் எடுத்து ஆடுகின்றது. இன்னிசை கேட்ட பசு கரவாமல் மடி சுரக்கின்றது; அழுத குழந்தை அதை நிறுத்திச் சிரிக்கிறது. இறைவன் கூட சாமகானம் கேட்டு இதயம் இளகியதாகப் புராணங்கள் புகலுகின்றன. மனிதனின் உடல் நோயை மறக்கச் செய்வது இசை; உள்ளத்துக்குச் சோர்வையும் கவலையையும் போக்கி உற்சாகம் தருவது இசை.

அறிஞர்களின் சொற்பொழிவுகள் ஒருவனின் கேள்வி ஞானத்தைப் பெருக்கவல்லன. நல்ல நெறியில் வாழ்க்கையை அமைக்க உதவுகின்றன; துன்ப வேளையிலே அந்த அறிவுரைகள் துணையாக விளங்க வல்லன. பண்பு, பணிவு, அறிவு, அடக்கம் முதலிய விழுமியங்களை வாழ்க்கையில் தேடிக் கொள்வதற்கு கேள்வி ஞானம் அவசியமாகும் என்ற உண்மையை உணருவோமாக.

□ □

www.padippakam.com

## சித்திரம் 17

# பருந்துகள்

ஆதவன் எழுந்து விட்டான்.

பூமியில் வாழும் ஜீவராசிகள் இயங்கத் தொடங்கி விட்டன.

வெள்ளைக் குதிரைகள் பூட்டிய, தகதகக்கும் பொற் தேரில் ஏறி, சூரியன் தனது அன்றாடப் பயணத்தை ஆரம் பித்து விட்டான்.

குயில்கள் மாமரத்துப் பூந்தளிர்களைக் கோதி மகிழ்ச்சியில் கூவுகின்றன; கிளிகள் மரப்பொந்துகளி லிருந்து வெளியேறிப் பறக்கின்றன. காகங்கள் கரைந்து குரல் காட்டி இரை தேடிப் புறப்பட்டு விட்டன.

மந்தைகள் கூட்டங் கூட்டமாக புல்லும், இலையும் தழையும் தேடி வயல்களை நோக்கிச் செல்லுகின்றன.

உடலில் உயிர் தரித்திருப்பதற்கு உணவு தேவை. அந்த உணவுக்கு ஆதாரமான தத்தமக்குரிய தொழில் களைப் புரிவதற்கு காலையில் மனிதர்களும் சுறுசுறுப்பாகி விட்டனர். விவசாயிகள், உழைப்பாளிகள், பாட்டாளி கள், உத்தியோகத்தர்கள் என அவரவர் வேலைத் தலத்தை நோக்கி வேகமாகப் புறப்பட்டு விட்டனர்.

சித்—4

படிப்பகம்

www.padippakam.com



அவர்களுக்கு உணவு வேண்டும்; அவர்களின் குடும்பத்தாருக்கு உணவு வேண்டும்; உணவுக்கும் மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கும் பணம் வேண்டும். பணத்தைத் தேடுவதற்கு உடல் உழைப்புச் சார்ந்த தொழில்களில் அல்லது அறிவு சார் தொழில்களில் ஈடுபடுவதற்கு மனிதர்கள் காலையில் புறப்பட்டு விட்டனர்.

மனிதர்களில் பெரும்பாலானவர்களின் உழைப்பினால் வரும் ஊதியம் அன்றாட அடிப்படைத் தேவைகளுக்கே போதுவதில்லை. அவ்வாறான வீடுகளில் பச்சிளங் குழந்தை பாலுக்கு அழும். பிள்ளைகள் வயிறு ஆறாமல் சோறுக்கு அழும் எஞ்சிய கஞ்சியைக் குடித்து விட்டு கணவனும் மனைவியும் கலங்கி நிற்பதுண்டு. வாழ்க்கையின் அடித்தட்டில் வாழும் மக்களின் அன்றாட நிலை இது. குழந்தைக்கான பாலுணவையோ பிள்ளைகளின் வளர்ச்சிக்கான போஷாக்குப் பொருட்களையோ வாங்கக்கூடிய சக்தி அவர்களின் வருமானத்துக்கு இல்லை.

பணவசதி மிக்கவர்கள் உணவுப் பொருட்களைத் தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து குவித்து வைப்பது வழக்கமாகி விட்டது. அதனால் வசதி குறைந்தவர்கள் வாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அவற்றின் விலை உயர்ந்து விடுகிறது. அத்தோடு அப்பொருட்களின் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. பணக்கார வீடுகளில் அஜீரணம்-ஏழைகளின் குடிசைகளில் பட்டினி என்றநிலை பகுத்தறிவு மிக்க மனித ஜாதியிடம் நிலவுவது வெட்கப் படவேண்டிய விஷயம்.

ஒவ்வொரு மனிதனும் அன்புவழியில்-அறநெறியில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், இந்த இழி நிலை ஏற்பட முடியாது. பலர் பசியால் வாட, சிலர் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து வாழ முற்படுவது அறத்துக்கு விரோதமானது; தர்மத்துக்கு விரோதமானது; மனித நேயத்துக்கு மாறனாது.

www.padippakam.com



வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் கலப்பாலாகியதே மனிதனின் உடல் எனக் கூறப்படும். எனவே ஏழையின் உடலிலும் இப்பஞ்சபூதங்கள் இருக்கின்றன, என்பதை வசதி படைத்தவர்கள் நினைவு கொள்ள வேண்டும். பஞ்ச பூதங்களுக்குத் துரோகம் இழைத்தால் முழு உலகமுமே கெட்டழிந்து விடும்.

''மக்கள் ஏன் பிறக்கின்றார்கள்? பிறந்து, உண்டு களித்து, மாண்டு போகவா அவர்கள் பிடிக்கிறார்கள்? ஒருவரோடு ஒருவர் கூடி வாழ்ந்து, அன்பைப் பெற்று, அந்த அன்பைப் பிற உயிர்களும் பெறத்துணை நின்று, முடிவில் இன்பநிலை எய்துவதே மக்கட்பிறவியின் நோக்கமாகும்.'' என மனிதப் பிறவியின் பயன் பற்றி தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் விளக்கத்தை இவ் வேளையில் நாம் சிந்திக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமான பொருளை, உணவை நாம் நமக்கென, நம்மவர்களுக்கு மட்டுமே என பதுக்கி,குவித்து வைக்கப்படாது. சமுதாயத்திலுள்ள மற்றும் மக்களுக்கும் அவை கிடைக்கக்கூடியவையாக இருக்க வேண்டும்.பெரும் பண்புகள் எனச் சான்றோரால் குறிக்கப்பட்டவை அனைத்திலும் பார்க்கச் சிறந்தது பகுத்து உண்டு வாழ்தலேயாகும்.

வயலில் புல் மேய்ந்த பசுக்கூட்டம், நிழற்புறத்தில் ஓய்வாகப்படுத்து வயிறு நிறைந்த திருப்தியில் அசை போடுகின்றன.........

உணவைக் கண்ட காகம் தானே தனித்து உண்ணாமல் கரைந்து, குரல் எழுப்பி, தன் இனத்தை பகுத்துண்ண அழைக்கின்றது. அதனால், எல்லாக் காக்கைகளுக்கும் எப்பொழுதும் போதிய உணவு கிடைக்கிறது. ஆனால் மனிதன்?

**''காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள''**

www.padippakam.com

# சித்திரம் 18

# வாய்மை

காலை நேரம்.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்லவேண்டும். வளர்ந்தவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும். முதியவர்கள் இறைவனை வணங்கச் செல்ல வேண்டும்.

நகர்ப்புறங்களில் குளியல் அறைகளும், கிராமப்புறங்களில் கிணறுகள், ஆறுகளும் சுறுசுறுப்பாகின்றன. குளிர்ந்த நீரில் உடம்மை நனைத்து, குளித்து முழுகி... கடமைகளுக்குப் புறப்படுவதன் முன் மனிதர்கள் உடலைச் சுத்தப்படுத்துகிறார்கள். உடலைத் தேய்த்து அழுக்கு அகற்றி, நீரை ஊற்றிக் கழுவுகிறார்கள். அழுக்கு அகற்றும் சவர்க்காரம், வாசனை தரும் சவர்க்காரம் என உடம்பில் தேய்த்து, நுரைகளை உடலெங்கும் பரப்பி, நிறைய நீரினால் கழுவுகின்றார்கள். ஆம்; உடல் அழுக்கைப் போக்கத் தூய்மைப் படுத்துவது நீர். மனிதனுக்கு மாசு உடலில் மட்டுமல்ல — உள்ளத்திலும் ஏற்படுவதுண்டு. மனத்தின் மாசை நீக்கித் தூய்மை ஏற்படுத்துவது வாய்மையே. உண்மை, வாய்மை, மெய்மை என்பவை ஒரு பொருள் தரும் சொற்கள். உள்ளத் தூய்மையாக அதாவது தீயவற்றை நினைக்காமல், நல்லவற்றை

www.padippakam.com



மட்டுமே எண்ணுவது உண்மையெனப்படுவது; தீயவை சொல்லாமல், நல்லவற்றை மட்டும் வாயினால் பேசுவது வாய்மை; தீய செயல்களைச் செய்யாமல் நல்லவை மட்டுமே செய்வது மெய்ம்மை.

மாசற்ற தூய உள்ளம் கொண்ட ஒருவரினாலேதான் தூய சொற்களைப் பேசமுடியும்; தூய செயல்களைச் செய்ய இயலும்.

**''உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாம்.''**

என்றார் மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

பிறிது ஓர் உயிருக்கும் சிறிது கூட தீங்கு ஏற்படாத சொற்களைச் சொல்லும் தன்மையாகிய வாய்மையைப் போன்ற சுத்தமான உயர்ந்த பொருள் உலகத்திலேயே இல்லை. வாய்மைதான் உலகத்தின் நன்மைகளுக்கெல் லாம் காரணமாக அமைந்திருப்பது. உலகின் தீமைகள் அனைத்திற்கும் அடித்தளமாக அமைவது பொய்ம்மை.

நல்லவையெல்லாம் ஒருவனை நாடி வருவதற்கும், அவை அவனோடு கூடி நிலையாக இருந்து இம்மையிலும் மறுமையிலும் இன்பந் தருவதற்கும் காரணமாகத் திகழ் வது, பிற உயிர்களுக்குத் துன்பம் சிறிதளவாவது ஏற்படாத வகையில் சொல்லுகின்ற சொற்களே. ஒரு தடவை வாய்மை தவறுவதன் மூலம் முழு உலகத்தையும் கட்டியாளுகின்ற சக்கரவர்த்திப் பட்டம் கிடைப்பதா யிருந்தாலும் கூட உயர்ந்தவர்கள் அதனைச் செய்ய ஒருப் படார்; உண்மை தவறாமல் இருப்பதற்காக உத்தமர்கள் எத்தனை இடுக்கண் ஏற்படினும் சகித்துக் கொள்வர்.

இதற்குச்சிறந்த உதாரணமாக அரிச்சந்திரன் விளங்கு கிறார். அரச கட்டிலை விட்டு இறங்கி, அன்பு மனைவி யைப் பிரிந்து, ஆசைப் புதல்வனை இழந்து, வெட்டி

www.padippakam.com



யான் என்ற நிலை ஏற்பட்ட போதும், தவவலிமை மிக்க விசுவாமித்திரரால் ஒரு பொய்யைக் கூட அரிச்சந்திரனின் வாயிலிருந்து வரவழைக்க முடியாமற் போனது. மெய்யையே எப்போதும் கடைப்பிடித்து வரும் ஒருவன், ஒரு நாள் எனினும் பொய்யைக் கூறி விட்டால், அதனையறிந்தவர்கள் எப்பொழுதும் அவனைப் பொய்யன் என்றே கருதுவர். பொய்யன் ஒருவன், தப்பித் தவறி ஒரு தரம் மெய்யைக் கூறிவிட்டாலும் யாரும் அதனை நம்புவதில்லை. பொய் பாவங்கள் பலவற்றின் விளை நிலம். பொய் கூறுவதிலிருந்துதான் களவு; கொள்ளை; கொலை எனப் பாவங்கள் பல விரிகின்றன. பொய் கூறுவதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பொய் கூறுபவனைத் துன்பத்துள் ஆழ்த்தும்; துயரங்களைச் சேர்க்கும்; மனிதனுக்ிருக்க வேண்டிய அருங்குணங்களை அழித்து வறுமையிலும் இருளிலும் அது ஒருவனை வாட்டும்; இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் அவனுக்கு அதே கதிதான் ஏற்படும்.

சத்தியம் தவறாமல் இந்த நூற்றாண்டிலும் வாழ முடியும் என்பதற்கு சிறந்த உதாரணமாக மகாத்மா காந்தி திகழ்ந்தவர். ''வாய்மையே கடவுள்; கடவுளே வாய்மை; எல்லா உயிர்களையும் ஒன்றாக மதித்துப் பேணி வாழ்தலே கடவுள் வழிபாடு'' எனக் கருதியவர் அவர்.

எமது வாழ்க்கையிலே, எமது மனமறிய, மற்றவர்களுக்குத் தீமை ஏற்படுத்தக் கூடிய, பிறரை வஞ்சிக்கக் கூடிய பொய்களைச் சொல்லாமல், தூய வாய்மையைக் கடைப்பிடித்து வாழ்வதில் உறுதியாக இருக்க வேண்டும். அதனைப் பார்த்து இளைய தலைமுறை தாமாகவே அதனைக் கைக்கொண்டு ஒழுகும். அதற்கான வழிகாட்டிகளை, ஏற்றுப் போற்றும். அருள் நெறியில் மனமார்ந்த ஒரு புதிய சமுதாயம் பூக்கும்.

**''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.''**

www.padippakam.com

## சித்திரம் 19

# கற்றதை அறிவுறுத்தல்

அதோ அந்தப் பூஞ்சோலையைப் பாருங்கள்...காலை வேளையிலே மனதிற்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் ஏற்படுத் தும் ரம்மியமான காட்சி. நேற்றுப் போதாக இருந்தவை இன்று விரிந்து மலராகச் சிரிக்கின்றன. அப்பப்பா! எத்தனை வகைகள்; எத்தனை வடிவங்கள்! எத்தனை வண்ணங்கள்!— சிவப்பு-மஞ்சள் - ஊதா - இவற்றோடு இவை மூன்றின் கலவையும், கொண்ட இன்னொரு புது நிறம்; அடுத்து நீலம், வெள்ளை, இன்னும் வார்த்தையி லடங்காத வண்ணக் கலவை கொண்ட மலர்கள் குங்குமப் பொட்டின் அளவிலும் பார்க்க சிறிய பூக்கள்-விரித்த கரத்தில் ஏந்திக் கொள்ளும் அளவில் அமைந்த பெரிய மலர்கள்... இரண்டுக்கும் இடைப்பட்ட அளவுகளில், உருவங்களில் எத்தனை மலர்கள்? எவ்வளவு மலர்கள்! கிளைகளில் தனித்து தலை நிமிர்ந்து நிற்கும் மலர்கள்; நெருங்கி இணைந்து கொத்தாக—குவியலாகத் தோற்றம் தரும் பூக்கள்.

நறுமணம் குவலயம் எங்கும் கம கம எனப் பரவு கின்றது. உயிரினங்கள் புத்தூக்கம் பெறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இயற்கை அன்னையே! இந்த இளங்காலைப் பொழுதிலே இந்த எழிற்காட்சியை அருளிய உன்னை நெஞ்சாரப் போற்றி மனமார ஆராதிக்கின்றோம்.

சூரியனைக் கண்டு இருளும் பனியும் விலகுகின்றன. வௌவாலும் ஆந்தையும் ஓடி ஒழிக்கின்றன. சுறுசுறுப்பில் மனிதர்களுக்குப் போட்டியாக வண்டுகளும், தேனீக்களும் ரீங்காரத்துடன் மலருக்கு மலர் தாவுகின்றன. ஆனால் சில வகையான மலர்களின் பக்கம் அவை எட்டியே பார்க்கவில்லை. உலகத்துக்கு மலர்கள் தேவை. பூக்களின் மகரந்தப் பொடிகள் வண்டுகள் மூலம் கலக்கப் படுவதினால்தான் மரஞ்செடிகள் காய்த்து, காய்கள் முற்றி... விதையாகி விதைகள் பூமியில் புதைந்து, செடிகளாகி, மரங்களாகி...பூமியின் இயற்கைச் சூழல் பேணப் படுவதற்கும், மழை பொழிவதற்கும், மரங்கள் - நெடிதுயர்ந்து சடைத்த மரங்கள் ஆதாரமாக விளங்குகின்றன.

மனிதனுக்குத்தானியம் மட்டுமல்ல மலர்களும் தேவை. தானியம் உடலுக்கான உணவுக்குப் பயன்படுகிறது. மனிதனுடைய உணர்வுகளை மகிழ்ச்சி, பக்தி, அன்பு, காதல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்த மனிதன் மலர்களைப் பயன்படுத்துகிறான். மலர் மங்கலச்சின்னமாகக் கொள்ளப்படுகின்றது. அவற்றை புனிதமாகத் தான் போற்றும் இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றான்; அலங்கரிக்கின்றான்; ஆராதனைப் பொருளாகத் தூவுகின்றான். பெரியார்களை, அறிஞர்களை வித்தகர்களைப் போற்றிப் பாராட்டும் சின்னமாக மலர்களினாலான மாலைகள் சூட்டப்படுகின்றன. மணவிழாக்களில் மங்கல வைபவங்களில் மாலைகளும் பூங்கொத்துக்களும் பிரதான இடத்தை வகிக்கின்றன.

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஓர் இன்றியமையாத பொருளாக மலர் இன்று இடம் பெற்று விட்ட காரணத்தினாலேதான், செடி கொடிகள் முளைக்க

www.padippakam.com



முடியாத பனி படர்ந்து நாடுகளும் பாலைவனம் சூழ்ந்த நாடுகளும் இறக்குமதி செய்யும் பொருட்களில் மலர்களும் அடங்கியுள்ளதைக்காண்கிறோம். அழகு மலர்கள், மண மிகு மலர்கள் அன்றாடம் ஆகாய விமானத்தில் ஆயிரக் கணக்கான மைல் தூரத்துக்குப் பயணத்தை மேற் கொள்ளுகின்றன. மனிதனின் அன்றாட வாழ்க்கையில் மட்டுமல்ல, அந்திம நிகழ்ச்சியில் கூட மலர்வடமாக, மாலைகளாக பூக்கள் இடம் பெறுவது இன்றைய வழக்க மாகிவிட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரை, சங்ககாலத்துக்கு முன் பிருந்தே மலர்களின் அருமையையும் பெருமையையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். மலர்களை கழுத்திலும் காதிலும் சூடி, ஆடியும் பாடியும் மகிழ்ந்தவர்கள், சில பூக்களை நோய்தீர்க்கும் மருந்துகளை ஆக்குவதற்கும் பயன் படுத்தினர்.

வண்ணப் பூக்களில் மணம் தருபவையுமுண்டு, மண மில்லாதவையுமுண்டு. மணமுள்ள மலரைத்தான் அனை வரும் விரும்பி, ஆசையுடன் பறித்துச் சூடிக் கொள்வர். அதற்குத்தான் மதிப்புண்டு. மணமற்றமலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தாலும் மதிக்கப் படுவதில்லை. பொட்டளவு முல்லைப்பூவை எத்தனை ஆசையுடன் தேடிப் பறித்துச் சூடுகிறோம். ஆனால் கொத்தான கட்டமைப்பும் கண்ணைப்பறிக்கும் நிறமும் கொண்ட முருக்கம் பூ நம் வீட்டு முற்றத்தில் நின்றாலும் தேடப் படுவதில்லையே!

நாம் பெற்ற கல்வி பிறருக்குப் பயன்படும் வகையில் பரப்பப்படவேண்டும். நிறையக்கற்றிருந்தும் கற்றவற்றை மற்றவர்கள் உணரும் வகையில் பேச்சால் அல்லது எழுத்

படிப்பகம்

www.padippakam.com



தால் எடுத்துச் சொல்லி விளக்கத் தெரியாதவர்கள் கொத்தாகப்பூத்தும் மணமில்லாத மலர்கள் போன்றவர்கள்.

**"இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர், கற்றது உணர விரித்து உரையாதார்."** என வள்ளுவப் பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

நறுமண மிக்க மலர்களாக நம்வாழ்க்கை அமையட்டும்.

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 20

# விடா முயற்சி

இளஞ்சூரியன், முகில் திரையைத்தூக்கி ஒதுக்கி விட்டு சிரித்த முகத்தோடு பூமித்தாயை எட்டிப்பார்க்கிறான். மரம், செடி, கொடி அனைத்தும், மஞ்சள் பூசித் குளித்த கன்னிப்பெண்ணின் கன்னம் போல எழில்க்கோலம் காட்டுகின்றன. குளிர்மை கண்களை நிறைக்கிறது. உள்ளம் உவகையில் திளைக்கிறது. அந்தப் பரந்த வாழைத்தோட்டம், அதன் பக்கத்தில், புகையிலை, மிளகாய், மரவள்ளி விளையும் தோட்டங்கள் அவை அனைத்தும், நித்திரை கலைந்து, மஞ்சளில் குளித்து கம்பீரமாக காட்சி தருகின்றன. அந்த வாழைத் தோட்டத்தின் விவசாயி அதிகாலையில் தனது தோட்டத்துக்கு வந்து ஒவ்வொரு மரமாக குழந்தையைத் தொடுவது போல தொட்டு, மனநிறைவோடு அவற்றைத் தடவிப் பார்க்கிறான். அவற்றின் காலடியில் புதிய குட்டிகள் முளைத்து தலையெடுத்து விட்டன. நிமிர்ந்து பார்க்கிறான். ஒவ்வொரு மரமும் சுமக்க முடியாத பெரிய குலையைச் சுமந்து கொண்டு ........பருத்த, நீண்ட, புகை நிறத்திலான காய்களைக் கொண்ட மொந்தன் குலைகள், கொழுத்து மினு மினுக்கும் கப்பல் காய்களைக் கொண்ட குலைகள், குங்குமம் தடவியது போன்ற மொத்தித்த காய்களைக் கொண்ட செவ்வாழைக் குலைகள், இடைப்

www.padippakam.com



பழம் பழுத்து விட்ட கதலிக்குலைகள்...... அவன் மனம் நிறைகிறது; வீட்டுத்தேவைக்கு இரண்டொரு குலைகளை யும், அநாதை மடத்துக்கு ஐந்து குலைகளையும் கொடுத்து விட்டு, மிகுதி அனைத்தையும் இரண்டொரு நாளில் ஏழுபொதிகளில் ஏற்றி சந்தைக்கு அனுப்ப வேண்டும் என அவன் மனக்கணக்குப் போட்டுக் கொள்கிறான்.

பரந்த அளவில் வாழை பயிரிடும் முயற்சியில் ஈடுபட்ட அந்த மூன்று ஆண்டுகளில் அவன் எத்தனை சோதனை களுக்கு முகம் கொடுத்து விட்டான். அவனுடன் சேர்ந்து அயல் தோட்டங்களில் வாழை பயிரிட்டவர்கள் முதல் முயற்சியிலேயே, மனம் சலித்து, அம்முயற்சியைக் கை விட்டு ஒதுங்கி, சிறிய பயிர்களாகிய மிளகாய்ச் செடி, புகையிலை, மரவள்ளி எனச் செய்கைகளில் இறங்கி விட,... சிலர் எதுவுமே வேண்டாம் என்மனம் சோர்ந்து, அன்றாடக் கூலித் தொழிலாளிகளாக மாறிவிட, அவன் மனம் கலங்காமல், சோர்வடையாமல் முயற்சியைக் கை விடாமல் தொடர்ந்து தொடர்ந்து வாழைச் செய்கையில் ஈடுபட்ட போது......

பற்றையும் செடிகளுமாகக் கிடந்த அந்தத்தரிசு நிலத்தை, குத்தகைக்கு எடுத்து அவனும் நண்பர்களும் பங்கு போட்டு, தகைய்யை உழுது பண்படுத்தி வாழையைப் பயிரிட்ட போது, பருவ மழையின் அளவான பங்களிப்பு, கன்னி நிலம், அந்த விவசாயிகளின் கண்காணிப்பு முதலிய காரணங்களால் அவை செழித்து வளர்ந்து, பருத்த வாழைப் பொத்திகளை வெளியே தள்ளியபோது அந்த விவசாயிகள் எதிர்பார்ப்புக்களந்த மகிழ்ச்சியுடன் விளைச் சலைக் காத்துக்கொண்டிருந்தனர்... காலையில் தூற்ற லாகத்துவங்கிய மழை, மாலையில் பெருமழையாகமாறி... இரவு பேய்க் காற்றும் சேர்ந்து விட... அந்த இளம் விவ சாயிகளின் நம்பிக்கை அடுத்த நாள் காலையில் வெறுங் கனவாகக் கலைந்து விட்டது. பூவும் காயும் சுமந்து நின்ற

www.padippakam.com



அத்தனை வாழைகளும், நடுவில் முறிந்து... நிலத்தில் இலைகளைப்பரப்பி தலையைக்குத்திக் கொண்டு கிடந்த காட்சி அவர்களின் நெஞ்சைக்கலக்கியது.

வேறுவழியில்லை; அவற்றை வெட்டி எறிந்து ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் உணவாக வீசினார்கள்.

''வயல்வெளிபார்த்த காணிக்கு வாழை சரிவராது; உயரமில்லாத பயிராக நட்டால் காற்றுக்குத் தாக்குப் பிடிக்கும்'' என மற்றவர்கள் கூறிக்கொண்டு கத்தரி, மிளகாய், புகையிலை என தமது தரைகளில் பயிர் மாற்றம் செய்தனர்.

அந்த விவசாயி மட்டும் அடுத்த தடவையும் தேர்ந்தெடுத்த வாழைகளைத்தான் பயிரிட்டான். மழை அவ்வப்போது பெய்தது. பெருங்காற்று எதுவும் வீசவில்லை. வாழைகள் அவன்தலை உயரத்தைத் தாண்டி எழுந்து விட்டன. பக்கத்துத் தோட்டங்களின் மிளகாய் புகையிலை விவசாயிகள் விளைச்சலை அறுவடை செய்யத் தொடங்கி விட்டார்கள். மழை இல்லை. வெயிலின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்தது. சிறுபயிர் நாட்டியவர்களுக்கு நீர் இறைப்பதற்கு அருகில் உள்ள கிணறுகள் போதும். பரந்த தோட்டத்தின் வாழைகளின் இலைகள் பழுக்கத் தொடங்கி விட்டன; நிமிர்ந்தெழுந்த குருத்துக்கள் வாடி... வதங்கி தொய்ந்து... கருகி... அந்தத்தடவையும் அவனுக்கு ஏமாற்றம்; கையிலிருந்த பணமெல்லாம் விரயமாகி விட்டது.

''வாழை ஒத்து வராது என்று அப்போதே நாங்கள் சொன்னம்...நீர் சொல்வழி கேட்டால் தானே. எங்களுக்கு இம்முறை ஏதும் நட்டம் ஏற்பட்டுதே.'' பக்கத்துத் தோட்டக்காரர்கள் அவன் தோல்வியைச் சுட்டிக்காட்டி, தமது விளைச்சல்களின் பெருமையைப் பெரிதும் பிரஸ்தாபித்தனர்.

www.padippakam.com



அடுத்த தடவையும் அவன் வகை வகையான வாழை களை வாங்கி வந்து பயிரிட்டான். மனைவியின் கழுத்துச் சங்கிலி கை கொடுத்தது. செயற்கரிய செயல்களைச்செய்து முடிப்பதற்கு அடிப்படையான மனமுயற்சியாகிய ஊக்கம் அவனிடம் இருந்தது. துன்பங்களைக் கண்டு துவழாமல், தொடர்ந்து செயலாற்றும் விடாமுயற்சியில் அவன் பிடி வாதமாக இருந்தான். மனது எண்ணம், செயல் இவற் றிற்கு அப்பாற்பட்ட சக்தியான ஊழ் வினையைக்கண்டு மயங்கி, முயற்சியைக் கைவிடாமல் ஆள்வினையை ஆற் றுக்கின்ற தன்மையைக் கண்ட திருமகள் அவன் கரங்களில் குடியேறி விட்டாள். தீய ஊழ் வெற்றியைத் தடுத்தாலும் முயற்சி வீண் போவதில்லை. மெய்ம் முயற்சியால் ஏற் பட்ட உடல் வருத்தத்துக்கு கிடைக்கும் பயனைத்தெய்வம் கூடத்தடுக்க முடியாது.

இன்று அந்த வாழைத்தோட்டத்திலே...சாம்பல் பூத்த பருத்த மொந்தன்குலைகள்; கொழுத்த மினு மினுக்கும் கோழிக் கூட்டுக் காய்களைக் கொண்ட குலைகள்......குங்கும நிறத்தைக்கொண்ட நீண்ட காய்கள் நிறைந்த செவ்வாழைக்குலைகள்......

**''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றி**
**தாழாது உஞற்றுபவர்.''**

□ □ □

www.padippakam.com

# சித்திரம் 21

# சான்றோர் நட்பு

இனிமையான காலைப் பொழுது.

இளஞ்சூரியனின் பொன்நிறமான கிரணங்கள் அந்த வயற் பிரதேசத்தில் மென்மையாகப் படருகின்றன.

அங்கு மனித சக்தி, சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில்-பூமியின் காய்ந்த மேற்பகுதியை அகற்றி, அடியிலிருக்கும் செழுமை வளங் கொண்ட மண்ணைப் புரட்டி எடுக்கும் பணியில், ஏர் பிடித்து, உழவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். இணை இணையாக எருதுகள் ஏர்களை இழுத்துச்சென்று, வயலில் வரி வரியாக பெரு வட்டம் சுழிக்கின்றன.

மற்றொருபுறம்—கூரான அலகு கொண்ட மண்வெட்டிகளால், நிலத்தைக் கொத்திப் பண்படுத்தும் மனிதச் சுறுசுறுப்பு.

இன்னொருபுறம்-பனை ஓலையால் வாகாக இழைக்கப்பட்ட பெரிய பட்டை மூலம், நீரை அள்ளி, அள்ளி இறைக்கும் வேகம் நீரிறைப்பை இலகுபடுத்துவதற்காக, விசையான துலா ஓட்டம்.

www.padippakam.com



தனது மக்களின் சுறுசுறுப்பான முயற்சியால், வாய்க் காலில் பாய்ந்தோடி வரும் நீரை, அந்த முதிய விவசாயி தமது கரும்புத் தோட்டத்துக்குச் செலுத்திக் கொண்டிருக் கிறான். ஒவ்வொரு செடியின் அடியிலும் நீர் சென்று நன்கு சுவறக்கூடியதாக, பாத்திகளைப் பார்த்துப்பார்த்து அவன் தண்ணீர் செலுத்துகிறான்.

அந்தக் கரும்புத் தோட்டத்தின் அரைவாசிப் பகுதி யிலுள்ள செடிகளின் தடிப்பான இலைகள் குத்திட்டு இருக்கின்றன. ஒவ்வொரு செடியின் அடிப்பாகத்திலும் செம்மையும் செழிப்பும் படர ஆரம்பித்து விட்டன.

தடித்த இலைகள் அவனின் உடம்பில் பட்டு சுணை யேற்படுத்துகின்றன. சுணைக்கும் உடம்பை சொறிந்து விடக்கூட அவனுக்கு நேரமில்லை. சுணை, சொறி, வியர்வை, களைப்பு விவசாயிகளுக்குப் பழக்கப்பட்ட சங்கதி.

நீர் இறைப்பவன், துலா ஓடுபவன், நிலம் உழுபவன், மண்ணைக் கொத்திப் பண்படுத்துபவன் எல்லோரினதும் நெற்றியில், புஜங்களில், முதுகில் வியர்வை வடிந்து ஒழுகுகின்றது— அவர்கள் அவ்வாறு, ஓடி ஓடி உழைப்பத னால் தான், உலகத்திலுள்ளவர்கள் உட்கார்ந்து உண வைச் சாப்பிட முடிகின்றது. உலகத்தார் உயிர் வாழ் வதற்கு உணவை உற்பத்தி செய்பவன், பனியென்றும் வெயில் என்றும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதே! எனினும், வெயில் ஏறுவதற்குமுன், விவசாய வேலையின் பெரும் பகுதியை, அதிக களைப்பில்லாமல் செய்து அவ முடிந்து விடலாம் அன்பதற்காகத்தான் அந்த சரம்; அத்தனை சுறுசுறுப்பு.

தண்ணீர் செலுத்தி கொண்டிருக்கும் முதியவர் 'கூ' எனக்குரல் கொடுக்கின்றார். 'போதும்' என்பதற்கான சமிக்ஞை அது. நீர் இறைப்பது நிற்கிறது. வாய்க்கால்

www.padippakam.com



வழியே பாய்ந்து வரும் தண்ணீரை இன்னும் எத்தனை செடிகளுக்குப் பாய்ச்ச முடியும் என்ற மனக்கணிப்பு அவருக்கு அனுபவப்பாடம்.

எஞ்சியுள்ள அரைவாசித் தோட்டத்துக்கு நீர் இறைப்பை நிறுத்தி, இன்றோடு ஒரு வாரமாகி விட்டது. இனி நீர் அவற்றுக்குத் தேவையில்லை. அந்தச் செடிகளின் இலைகள், பழுத்து, சருகாகி, நடுவில் முறிந்து, தென்றலில் ஆடிக் கொண்டிருக்கின்றன...... அறுவடை செய்யப்படுவதற்காக அச்செடிகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

உடலில் வழிந்தோடும் வியர்வையை, அவர்கள் கழுவித்துடைத்து விட்டு, கிணற்றடிப் பூவரசமர நிழலில் உட்கார்ந்தனர். தனது கணவனுக்கும், பிள்ளைகளுக்கும், காலை உணவாகக் கொண்டு வந்திருந்த, தயிர் விட்டுக் குழைத்த பழைய சோற்றையும், தேங்காய்ச் சம்பலையும் அவள் கலங்களில் இட்டு, அவர்களுக்கு பரிமாறியபோது அவ்வுணவு, அவ்வேளையில் அவர்களுக்கு மிகவும் பிடித்ததாக இருந்தது.

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும், இளைய பையன் பள்ளிக்கூடம் செல்வதற்காகத் தன்னைத் தயார்ப் படுத்துவதற்கு தாயோடு புறப்பட்டு விட்டான். தந்தையும் மூத்த மகனும் கரும்புத்தோட்டத்தை நோக்கிச் சென்றனர். அவர்கள் சாப்பிட்ட இடத்தில், சோற்றுப் பருக்கைகளைப் பொறுக்குவதில், காகங்கள் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

இலைகள் காய்ந்திருந்த ஒவ்வொரு செடியின் அடிப்புறமும், பல தண்டுகளாக கிளைத்து, கொழுத்து விளைந்து, செம்மை பூரித்திருந்தன.

ஒரு செடியின் இரு தண்டுகளை அவன் வெட்டி எடுத்தான். அவற்றை நடுவில் வெட்டி, நுனிப்பாகத்தையும் இலைகளையும் கழித்து விட்டு, அடிப்பாகத்தின் தடித்த தோல்களை சீவி நீக்கினான். சுவைத்துப் பார்க்

சித்—5

www.padippakam.com



கும்படி ஒன்றை மகனிடம் நீட்டினான். மற்றதை நுனிப் பக்கமாகத் தொடங்கி அவன் கடிக்கத் துவங்கினான்.

அடிப்புறத்திலிருந்து கடித்துச் சுவைக்கத்தொடங்கிய இளைஞன் ''ஓ! நல்ல இனிப்பு அப்பு!'' என ஆனந்தப்பட்டான்.

தகப்பன் சிரித்துக் கொண்டான்.

அடிப்பக்கத்தைச் சுவைத்து முடித்து நுனிப்பக்கமாக சுவைக்கத் தொடங்கியபோது, இளைஞனுக்கு ஏமாற்றமாயிருந்தது. ''சீ! இனிப்புக் குறைஞ்சு போய் சப்பெண்டு இருக்கு அப்பு!''-அவன் குரலில் பழைய உற்சாகமில்லை.

நுனியிலிருந்து அடியை நோக்கிச் சுவைத்துச் செல்லும்போதுதான் கரும்பில் உள்ள இனிப்புச்சுவையைப் பூரணமாக அனுபவிக்கமுடியும் என்ற உண்மையை உணர்ந்த தகப்பன் மீண்டும் சிரித்தார்.

அன்பும் பண்பும் இல்லாதவர்களுடைய நட்பு காலம் போகப் போக குறைந்து விடும்; சலிப்பும் ஏற்படுத்தும். கற்றுணர்ந்த சான்றோர்களுடைய சகவாசமும் நட்பும் அதிக பயனுள்ளதாக வளர்ந்து கொண்டே செல்லும்.

**''கனைகடல் தண் சேர்ப்ப, கற்றறிந்தார் கேண்மை**
**நுனியில் கரும்பு தின்றற்றே-நுனி நீக்கித்**
**தூரில் தின்றன்ன தகைத்தரோ பண்பிலா**
**ஈரம் இலாளர் தொடர்பு''**

**—நாலடியார்.**

இனிமையான காலைப் பொழுது.

இளஞ்சூரியனின். பொன்நிறமான கிரணங்கள் அந்தக் கரும்புத் தோட்டத்தின் மீது மென்மையாகப் படருகின்றன.

www.padippakam.com

சித்திரம் 22.

# இரக்கம்

பொழுது புலருகின்றது...

மலர்கள் இலேசாகக் கண் விழித்துப் பார்க்கின்றன. அவற்றிலிருந்து வரும் சுகந்தத்தில், கிறங்கிப் போன இருள், விலகிச் செல்வதற்குத் தயங்கிக் கொண்டிருக் கின்றது.

அந்த இரண்டுங் கெட்ட பொழுதுதான், அந்த ஊர் கன்னிப் பெண்களுக்கு, மிகவும் பிடித்தமான வேளை.

சுறுசுறுப்பாக எழுந்து, கையில் குடத்தை எடுத்துக் கொண்டு, அந்தப் பெண்கள் கூட்டங் கூட்டமாக புறப் பட்டு விட்டார்கள்.

அதே ஊருக்கு அழகையும், செழிப்பையும், பயனையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஆற்றை நோக்கி அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

அதிக ஆழமாக இல்லாமல், மெதுவான ஓட்டத்தில், அந்த ஆற்றில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது.

ஆற்றங்கரையில் படர்ந்துள்ள அறுகம் புல்லின் தளிர் களில், முந்திய இரவில் தெளிக்கப்பட்ட பனித்துளிகள், கன்னியர்களின் மென்பாதம் அவற்றில் பதிந்ததும், ஒரு

www.padippakam.com



கணம் அவர்களின் உடம்பு 'ஜில்லிடு'கின்றது. அதனைப் பொருட்படுத்தாமல், அவர்கள் உற்சாகத் துள்ளலுடன் ஆற்றில் இறங்கி விட்டார்கள்.

ஒரு தடவை, தலையை நீரில் தாழ்த்தி, நிமிர்ந்து எழுந்தவுடன், குளிர் எங்கோ பறந்துவிட்டது! புத்துணர்வில், சிரிப்பும் மகிழ்ச்சியும் கலந்த குதூகலக் குரல் அங்கு பரவுகின்றது.

இருள் அகலாத அந்தப் பொழுது, அவர்கள் சுதந்திரமாகக் குளிப்பதற்கு வாய்ப்பான வேளை; அவர்கள் உடுப்பு மாற்றுவதை, உடம்புக்கு சவர்க்காரம் போடுவதை, எந்தக் கண்ணும், அவ்வேளையில் திருட்டுத் தனமாக, மேய முடியாது.

குளிப்பை முடித்த அக்கன்னியர்கள், குடங்களை நிரம்பிக் கொண்டு, தலை முடியிலிருந்து நீர் சொட்டச் சொட்ட, இல்லங்களுக்குத் திரும்பிய போது, அவர்களின் அன்னைமார் பசுக்களில் பால் கறந்து கொண்டிருந்தனர். ஆண்கள் வயலுக்கு நீரேற்றப் போய்விட்டனர்.

தலையைத் துவட்டி, கூந்தலின் நுனியில் சிறிய முடிச்சுப் போட்டுக் கொண்டு, புதிய உடை தரித்து, அப்போதுதான் மலர்ந்த பூவொன்றை, செடியிலிருந்து பறித்து கூந்தலில் செருகிக்கொண்டு, தத்தமது வீட்டு வாசல்களில் அவர்கள் கோலமிடத் துவங்கிவிட்டனர்.

மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்ல, அவ்வூர் மக்களின் உணவுக்கு, பயிர்களின் விளைச்சலுக்கு, மண்ணின் செழிப்புக்கு, நிலத்தின் குளிர்மைக்கு, வாழை, மா, பலா, தென்னை, கமுகு மரங்களின் வளர்ச்சிக்கு, மற்றும் அனைத்துத் தேவைக்கும் ஆதாரமாக அந்த ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குத் தேவையானவற்றை அள்ளிக் கொடுக்கும் வள்ளலாக அது அவர்களுக்குத் திகழ்கிறது!

www.padippakam.com



அந்த ஊரின் செழிப்பிலும், மக்களின் மகிழ்ச்சியின் மீதும் திடீரெனக் கண்ணூறு ஏற்பட்டு விட்டது.

அடுத்த சில மாதங்களில் இயற்கை பொய்த்து விட்டது... ஊர்ந்து ஊர்ந்து வரத்துவங்கிய ஆறு சில வாரங்களில் முற்றாகவே வற்றி விட்டது! வாழைகள் வாடி மெலிந்து, வயிற்றிலுள்ள குலைகளைப் பிரசவிக்க முடியாமல் சரிந்து விட்டன. நெற் பயிர்கள் நிலத்தோடு கருகி, காய்ந்த புற்களாகி விட்டன. தென்னை மரங்களில் வட்டுகள் மொட்டையாகி விட்டன. செழிப்பான அவ் வூர் மண், காய்ந்து இறுக்கமாகி, கால் வைக்கமுடியாதபடி சூடாகிவிட்டது. கரைகளில் படர்ந்திருந்த அறுகம்புல் கூட கருகி விட்டது.

கறவை மாடுகளும் கால்நடைகளும் நோய் கண்டு மடியத் துவங்கி விட்டன.

— குளிப்பதற்கு அவர்களுக்கு நீர் இல்லை.
— உணவைச் சமைப்பதற்கு நீர் இல்லை.
— குடிப்பதற்குக் கூட அவர்கள் குடத்தை ஏந்திக் கொண்டு நீர் தேடி அலையவேண்டிய நிர்ப்பந்தம்!

நிலை குலைந்து போன அவ்வூர் மக்களின் பரிதாபத் தைக் கண்டு கலங்கிப் போன ஊரின் தலைமைக்காரன் போன்ற அந்த முதியவரின் நினைவுக்கு, யாரோ, எப்போதோ கூறியது ஞாபகத்துக்கு வர...

ஆறு அமைந்திருந்த இடத்துக்குச் சென்று அலவாங்கி னால் துளையிட்டுப்பார்த்தான். அவனுக்கு உதவியாக ஆறு ஏழு பேர் ஆழமாகத் துளையிட்டனர். சிறிது நேரத்தில், கொஞ்சம் கொஞ்சமாக அங்கு நீர் பொசிந்தது! அவர் களின் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான நீர் அங்கே ஊற்றாகச் சுரக்கத் துவங்கி விட்டது!... மகிழ்ச்சிப் பூரிப்பினால் அவ்வூர் மக்களின் கண்களில் கண்ணீர் கசிந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்-ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தரானாலும்
இல்லை யெனமாட்டார் இசைந்து.''

உணவில்லாமல் மனிதன் வாழ முடியாது; உழைப்பில்லாமல் வெளியே உலவ முடியாது; அவன் வசிப்பதற்கு ஒரு தங்கும் இடம் தேவை. இந்த அடிப்படைத் தேவைகளே இல்லாமல் தவிக்கின்ற பஞ்சைகள், பராரிகள்மீது இரக்கங் கொண்டு, அவர்களின் துயர் துடைப்பதில் அக்கறையெடுக்க வேண்டும் என்ற மனிதத் தன்மையை—இரக்கக் குணத்தை மனிதன் துடைத்து எறிந்து கொள்வதைக் காணுகின்றோம்.

பிற உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு இரங்குவது உயிர்களின் இயல்பு என்பதனை ஏராளமானோர் மறந்து விடுகின்றனர்; 'நான், எனக்கு' என்ற சுயநலம் மேலோங்கி நிற்கின்றது. உதவி புரியும் எண்ணம் கொண்ட சிலர் கூட, உதவி புரியப் படுபவர் தனது சாதியைச் சேர்ந்தவரா? தனது இனத்தைச் சேர்ந்தவரா? தனது கட்சியைச் சேர்ந்தவரா? என அறிந்தபின், தமக்குச் சாதகமாக இருந்தால் மட்டுமே உதவுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

வரண்டுவிட்ட நிலையில் அந்த ஆறு தன்னை நம்பியிருந்த மக்கள் மீது இரக்கங் கொண்டு, நீரைச் சுரந்து கொடுக்கின்ற தன்மையை, மனிதன் உணர்ந்து மனிதத் தன்மை மிக்கவனாக இரக்க உணர்வு கொண்டவனாக விளங்க வேண்டும். வாரி அள்ளிக் கொடுக்க முடியாவிட்டால் கூட, உள்ளவற்றில் சிறிதை இல்லாதவர்க்கு கிள்ளியாவது கொடுக்க வேண்டும்.

பொழுது புலருகின்றது...

மலர்கள் இலேசாகக் கண் விழித்துப் பார்க்கின்றன. அவற்றிலிருந்து வரும் சுகந்தத்தில், கிறங்கிப் போன இருள், விலகிச் செல்வதற்குத் தயங்கிக் கொண்டிருக்கின்றது...

## சித்திரம் 23

# இயற்கையின் அழிவு

சூரியன் விழித்து எழுந்துவிட்டான்.

கோழிகள் கூவி ஓய்ந்து, பேடுகளுடன் சேர்ந்து இரை பொறுக்கத்துவங்கி விட்டன.

காகங்களும், மற்றும் புள்ளினங்களும், பள்ளி எழுச்சி பாடி மகிழ்ந்தபின், உணவுதேடும் சுறுசுறுப்பில் ஈடுபட்டு விட்டன.

மொட்டுகள் கூட கட்டவிழ்ந்து, நன்கு விரிந்து மலராகி, மரஞ்செடிகளில், வெவ்வேறு வண்ணங்களில், உருவங்களில் எழிற்தோற்றம் அளிக்கின்றன. அவற்றைச் சுற்றிச்சுற்றி, வண்டுகளின் ரீங்கார இசை.

மனித இயக்கமும் சுறு சுறுப்பாகி விட்டது.

எனினும், சூரியனின் விழிப்பார்வை, அந்த ஊரில் படுவதற்கு இன்னும் சற்று நேரம் இருக்கிறது— இன்றல்ல, என்றும் இதே மாதிரித்தான்!

ஊரின் கிழக்குப்பக்கத்திலிருக்கும் மலையடிவாரத்திலுள்ள, பருத்த நெடிதுயர்ந்த சடைத்த மரங்களின் மேலான சூரியக்கதிர்கள் அந்த ஊருக்குள் எழுந்துவர சுணக்கம் ஏற்படுவது வழக்கம்.

www.padippakam.com



இரவு முழுவதும் பனியில் நனைந்த அந்த மரங்கள், சூரியனைக்கண்டு, கிளைகளை உதறி, சிலிர்த்து சோம்பல் முறித்துக் கொள்ளுகின்றன. இருள் அடர்ந்த அம்மரங் களில் உள்ள காகக் கூடுகளில் அடைந்து கிடந்த குயில் குஞ்சுகள், இப்பொழுதுதான் விழித்து எழுந்து ''கூ...குக்கு'' எனக்குரல் காட்டுகின்றன.

அந்த ஊர்ப்பரப்பில் அடர்ந்துள்ள தாவரங்கள் பச்சைப் பசேல் தோற்றங்காட்டுகின்றன. வயல்களின் செழிப்பு; தோட்டங்களில் விளைச்சல்; அந்தப்பிரதேசம் முழுதும் செழுமையும் இயற்கை எழிலும் கொப்ப ளிக்கிறது.

இவை அனைத்தும் அந்த ஊரில் ஏற்படுவதற்கு துணையாக இருப்பது, இயற்கையின் நியதி தவறாமல் பருவமழை அங்கு பெய்வது தான்!

உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப் பதற்கும், உணவைச்சமைப்பதற்கும், உயிரினங்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கும் தண்ணீர் அத்தியாவசியம். தண்ணீரைத் தருவது மழை.

பூமியின் பெரும்பகுதியாக கடல் அமைந்துள்ள போதிலும், அதன் நீரிலிருந்து உப்பு மட்டும் தான் விளை விக்கலாம். உணவுப் பயிர்களை விளைவிக்க முடியாது; உணவைச் சமைப்பதற்கு உபயோகிக்க இயலாது; குடிப் பதற்கு நீராகப்பயன்படுத்த முடியாத உவர்த்தன்மை கொண்டது அது. அந்த உவர் நீரை உறிஞ்சி, ஆவியாக மாற்றி, பயன் படுத்தக்கூடிய தண்ணீராகத் தருவது மழை தான்!

தனி ஒருவனுக்கு மட்டுமல்ல—அந்த ஊருக்கு மட்டு மல்ல—உலக சமுதாயம் முழுவதற்கும் வேண்டிய உணவுப் பொருள்களின் விளைச்சலுக்கு துணை நிற்பது மழையே.

www.padippakam.com



குடிப்பதற்கும் குறுகிய இடத்தில் பயிர்விளைவிப்பதற்கும், ஆற்று நீரும் ஊற்று நீரும் ஓரளவு உதவியாக இருந்தாலும், அவை வற்றிப் போகாமல் இருப்பதற்கு ஆதாரமான மழை பெய்ய வேண்டும்.

உணவுப்பயிர்களை விளைவிப்பதற்கு, விவசாயி மண்வளத்தைச் செழுமைப்படுத்த வேண்டும். நிலத்தை நெகிழச்செய்து பண்படுத்துவதற்கு விவசாயிக்கு மழை வேண்டும். நாற்றுப்பருவத்தில் மழை வேண்டும்; பயிர்கள் விளையும் பருவத்தில் மழை வேண்டும். பருவ மழை பொய்த்தால், உரிய விளைச்சல் ஏற்படாது. விளைச்சல் இல்லாவிடில், விவசாயி மட்டுமல்ல, ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருப்போரும்-உண்ண உணவு கிடைக்காத காரணத்தால், அத்தொழில்களைச் செய்ய முடியாத நிலைக்குத்தள்ளப்படுவர். வருமானம் இல்லாது போனால் வறுமையும் பசிப்பிணியும் உலகை உலுக்கி எடுக்கும். உயிர்கள் பசியாலும் பிணிகளாலும் செத்து மடிந்து விடும். இந்நிலை ஏற்படாதிருக்க, மழை பெய்வதற்கான இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியம் அல்லவா?

......ஆனால் நாம் இன்று எதனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்?

அந்த ஊரை, சில வாரங்களின் பின் மீண்டும் பார்க்கிறோம்.

கிழக்குப்புற மலைச்சரிவில் புதிய ஆட்களின் நடமாட்டம். பெரிய பெரிய வாகனங்கள் வருகின்றன. புதிய புதிய எந்திரங்கள் பொருத்தபபடுகின்றன.

இரவு பகலாக, அந்தப்பாரிய மரங்கள் அரியப்பட்டு ......அவை ஒன்றின் பின் ஒன்றாக விழுந்து சரியும் ஓசை அந்த ஊர் முழுவதும் கேட்கிறது.

www.padippakam.com



பருத்த அந்நெடுமரங்கள், அவசரம் அவசரமாகத் துண்டாடப்பட்டு, இரவோடு இரவாக, லொறிகளிலும், ட்றக்குகளிலும், நகரங்களை நோக்கிக்கொண்டு செல்லப் படுகின்றன.

மரங்கள் அடர்ந்திருந்த அந்தப்பகுதி, பாழ் வெளியாகி......

இப்போது சூரியக்கதிர்கள், உதயத்தின் போதே அந்த ஊரில் 'பளிச்' சென்று படுகின்றன!

மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற வாகனங்கள். திரும்பி அவ்வூருக்கு வரும் போது வெறுமையாக வர வில்லை. சீமேந்து, கல், சுண்ணாம்பு, இரும்பு முதலிய கட்டிடப் பொருட்களைச் சுமந்து கொண்டு வந்து குவித்துக் கொண்டிருக்கின்றன.

இரவுபகலாக தொடர்ந்து, புகையைக்கக்கும் பெரிய தொழிற்சாலை ஒன்று அங்கு உதயமாகப் போகிறது!

அதிவிரைவாக பணத்தைக் குவிக்க வேண்டுமென்ற சிலரின் பேராசைக்கு, செழிப்பு மிக்க அந்த விவசாயக் கிராமம் விரைவில் இரையாகப் போகிறது! தூசிப் படலங்கள் அவ்வூர் மக்களின் சுவாசப்பைகளில் சேரப் போகின்றன!

காடுகள் அழிந்து விட்டதால், மழை அரிதாகத்தான், இனி, அங்கு தலைகாட்டும்.

சூரியன் விழித்து எழுந்துவிட்டான்.

இப்பொழுது அந்தக் கிராமத்தில் வெப்பம் மிகுந்த சூரியக் கதிர்கள் விரைவில் 'பளிச்' செனப்பட்டு, எஞ்சியுள்ள பயிர்களை தலை சாய்க்க வைக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அவ்வூரின் வயோதிப விவசாயி ஒருவன், தனது நடுங்கும் கரங்களால், கண்களுக்கு நிழல் அமைத்து, வாடி வதங்கிக் கொண்டிருக்கும் பயிர்களை, கூசிப்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''விண் நின்று பொய்ப்பின் விரிநீர்வியன் உலகத்து
உள் நின்று உடற்றும் பசி.''

—குறள்.

□ □

படிப்பகம்

www.padippakam.com

## சித்திரம் 24

# ஒழுக்கம்

காலை வேளை — நேரம் 7 மணி.

அந்தக் கல்லூரி வளாகம் மிகச் சுறுசுறுப்பாகி விட்டது. ஏழரை மணிக்கு, கல்லூரி ஆரம்பித்துவிடும். அதற்குமுன் நடந்தும், வாகனங்களிலும், மாணவ, மாணவிகள் விரைவாக அங்கு வந்து சேரத் துவங்கி விட்டனர்.

மாணவிகள் ஒரே விதமான வெள்ளைச் சட்டைகளை அணிந்து கொண்டும், மாணவர்கள் நீலநிற அரைக்காற் சட்டை, வெள்ளை 'ஷர்ட்' அணிந்து கொண்டும் அங்கு வந்து சேரத் துவங்கி விட்டனர். கைகளில் புத்தகச்சுமை, உடலில் சுறுசுறுப்பு, முகங்களில் மலர்ச்சி—குடும்பத்தின் எந்தக் கஷ்டமும் கவலையும் தமது செல்வங்களின் மீது படராமல் பெற்றோர்கள் கவனமெடுத்துக் கொண்டதால் புதிய மலர்கள் போன்று அந்த முகங்கள் பொலிவுடன் தோன்றின.

தொடக்க மணி ஒலிக்கின்றது.

வகுப்புகளிலிருந்து, அவர்கள் வரிசை வரிசையாகப் புறப்பட்டு, கல்லூரிச் சபா மண்டபத்தில் அணிவகுத்து நிற்கின்றனர்.

www.padippakam.com



— இறை வணக்கம், சமய போதனை, கல்லூரி முதல்வரின் சில அறிவிப்புகள்... அந்தத் தவணைக்குரிய கட்டணம் செலுத்தப்பட வேண்டிய இறுதித் தினம் பற்றிய அறிவிப்பும் அழுத்தமாக சொல்லப்படுகிறது...

மீண்டும் அவர்கள் தமது வகுப்புகளை நோக்கி அணி வகுத்துச் செல்கின்றனர்.

அறிவியல், வர்த்தகம், மருத்துவம், பொறியியல், கணனித் துறை, இலக்கியம் எனப் பல துறைகளில் பாடங்களைப் போதிக்கும் வசதிகளைக் கொண்ட கல்லூரி அது. மாணவர்களின் திறமை, நாட்டம், வசதி போன்றவற்றின் அடிப்படையில், அவர்களைப் பிரித்து, சம்பந்தப்பட்ட துறையில் அங்கு அவர்களுக்கு கல்வி போதனை நடத்தப்படும்.

ஆம்-21-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலப் பகுதியில் விஞ்ஞானிகளாக, பொறியியலாளர்களாக, ஏன்-எழுத்தாளர்களாகக் கூட-விளங்கப் போகின்ற புதிய சமுதாயம் ஒன்று அங்கே உருவாகிக்கொண்டிருக்கின்றது!

இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போல, மனசில் இறுக்கமாகப் பதிந்துவிடும். சிறுவயதில் ஒருவன் கற்கத் தொடங்குவதனால், அவன் பெறும் கல்வி பயிற்சியின் பயனாக, வாழ்க்கையின் முதலாவது கால் நூற்றாண்டுப் பராயத்திற்குள், வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஈட்டக் கூடிய, தொழிலிலும் அவன் அமர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பல பெற்றோர்கள், எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் பெரிய தொழில்களில் அமர்ந்து, பணமும், புகழும் ஈட்ட வேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்பு தவறல்ல—பணமும் புகழும் மட்டுமல்லாமல். ஒருவனிடம் ஒழுக்கமும் இருக்க வேண்டும்.

www.padippakam.com



கல்வியின் பயன், தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமல்ல; பண்பும், ஒழுக்கமும் மிக்க நற் பிரஜைகளை நாளைய சமுதாயத்துக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

கல்வியினாற் பெறப்படும் அறிவு வாய்ப்பான தொழிலில் ஒருவன் அமர்ந்து கொள்வதற்கு மட்டு மல்லாமல், அவனை நல்லொழுக்கத்துக்கு இட்டுச் செல்ல வேண்டும். ஒழுக்க குணமில்லா விடில், ஒருவன் பெற்ற கல்வியும் அறிவும் பயனற்றவை என ஆன்றோர்கள் அழுத்திக் கூறியுள்ளனர் பல நூல்களைக் கற்று, பல பட்டங்களைப் பெற்று, கல்விமான் என ஒருவன் தன்னைக் கருதிக் கொண்டாலும், அவன் ஒழுக்கம் இல்லாதவனாக இருந்தால், அவனைப் பார்த்து மக்கள் கடைப்பிடிக்கக் கூடிய சமுதாயப் பங்களிப்பு எதனையும் அவனால் நல்க முடியாது; அவன் வெறும் புத்தகப் புழுவாகத்தான் கருதப்படுவான்.

இளமையில் அளிக்கப்படும் கல்வி, நாட்டில் நல் லாட்சி நடைபெறவும், மக்களால் சட்டங்கள் மதித்துப் பாதுகாக்கப்படவும், தீயோர்களின் துன்புறுத்தல்களி னால் மக்கள் துயருறுவதை தடுக்கவும் கூடிய நற்செயல் களை விரும்பும் ஒழுக்கக் குணமுள்ள நல்ல பிரஜைகளை எதிர்கால சமுதாயத்துக்கு உருவாக்கிக் கொடுப்பதற்குப் பயன்பட வேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் ஒரே தொழிலையே செய்ய வேண்டியதில்லை; அப்படிச் செய்யவும் முடியாது. அவர்கள் சார்ந்துள்ள தொழில்களின் தன்மைக்கு ஏற்ற வாறு வெவ்வேறு வகையான கடமைகளும் இருக்கும்; வெவ்வேறு விதமான கல்விப் பயிற்சியையும் தத்தமது தொழிலின் தன்மைக்கேற்ப அவர்கள் பெற்றிருக்க வேண்டும்—ஆனால். நல்லொழுக்கம் எல்லோருக்கும் பொது; வாழ்க்கையின் அடித்தளமே அதுதான். அடித் தளம் ஆட்டம் கண்டால், வாழ்க்கையே குலைந்துவிடும்!

www.padippakam.com



தனி ஒருவனிடம் நல்லொழுக்கம் அமைந்திருக்கா விடில், அவன் சார்ந்துள்ள சமுதாயத்திலே குடி, போதை வஸ்துப் பாவனை, சிற்றின்பச் சீரழிவுகள் முதலியவை தலையெடுக்கும். அவன் மனதில் சில வேளைகளில் நல்ல சிந்தனை ஏற்பட்டாலும், அவனின் தீய ஒழுக்கம் குறுக்கே நின்று, வாழ்க்கையில் முன்னேறாதபடி அவனைச் சறுக்கி விடும். தீய ஒழுக்கம் ஒருவனை பஞ்சமாபாதகங்களுக்கு இட்டுச் செல்லும். இறுதியில் அவன் வன்முறையாளனாக மாறி, சமுதாயத்துக்கே சவாலாகி, அழிவையே தேடிக் கொள்ளுகின்றான்.

நல்லொழுக்கம், நல்ல மனதிலே விளையக் கூடிய பயிர். மாசுமறு, சூதுவாது தெரியாததாக மனம் இருக்கக் கூடிய பருவம் இளம் பராயமே. நற்செயல் களின்மீது நாட்டத்தையும், அதனைச் செய்வதற்கான உறுதியையும் உண்டாக்குவதற்கு, அந்தப் பருவத்தில் அளிக்கப்படும் கல்வி உதவுவதாக அமைய வேண்டும்.

**''கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்க முமாம்...''**

என வலியுறுத்திய நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் கருத்தை இங்கு மனங்கொள்வது பொருத்தமானது.

காலை வேளை...

அந்தக் கல்லூரி வளாகம் சுறுசுறுப்பாகி விட்டது.

அன்றலர்ந்த மலர்கள் போன்ற மாணவர்கள் அங்கு வந்து சேரத் தொடங்கி விட்டனர்.

□ □ □

www.padippakam.com



வேட்டை முடிந்து, அம்மன் தனது கோயிலைச் சென்றடையும் போது, கிழக்கு வெளுத்துவிட்டது.

எங்களூரில் இரு நண்பர்கள்; இளைஞர்கள்- அவர்கள் இணைபிரியாத நண்பர்கள். அம்மன் புறப்பட்ட நேரத்தி லிருந்து, வேட்டையை முடித்துவிட்டு, கோயிலுக்கு மீண்டும் வந்து சேரும் வரை, ஒரு நிகழ்ச்சியைக்கூட தவற விடாமல் பார்த்து ரசித்தார்கள்.

கிழக்குப் புலருகிற வேளையில், களைத்துப்போய், தாம் வசிக்கிற வீட்டுக்கு வந்து சரிந்து படுத்துவிட்டனர்.

நித்திரைக்கிறக்கம் உடனே அவர்களை உறங்கச் செய் து விட்டது. ஆழ்ந்த நித்திரையாகி விட்டார்கள்.

அவர்களில் ஒருவனிடம் ஒரு நல்ல பழக்கமிருந்தது. எவ்வளவு சுணங்கிப்படுத்தாலும், உரிய வேளையில் விழித்து விடுவான். இளஞ்சூரியக்கதிர் கண்களில் பட, அவன் விழித்து எழுந்து விட்டான். நண்பனைப் பார்த் தான். அவன் இன்னும் ஆழ்ந்த நித்திரை: அவனின் கோலத்தைப்பார்த்து அவன் 'திடுக்' குற்று விட்டான்! உடுத்தியிருந்த வேஷ்டி, அவிழ்ந்து, விலகி...... நண்பனின் கோலத்தைப்பார்த்து 'திடுக்'குற்ற அவன், யாராவது பார்த்தால் நண்பனின் மானம் போய்விடுமே என்ற தவிப்பில், எழுந்து ஓடோடிச்சென்று, நண்பனின் உடை யைச் சரி செய்து விட்டான்.

நண்பர்க்கு கேடு வந்துற்ற போது உடனே சென்று உதவுவதுதான் நண்பர்களின் கடமை. நண்பர்க்கு மான பங்கம் ஏற்படும் போது அதனைத்தடுக்க வேண்டும். துன்பம் ஏற்படும் வேளையில் அதனைத்துடைக்க வேண்டும். ஒருவருடன் நட்புப்பூணமுன்னரே, அவரைப் பற்றி நன்கு தெரிந்த பின்புதான் நட்புறவு கொள்ள வேண்டும். நட்புறவு ஏற்பட்ட பின்னர், அந்த நண்பனின் குறைகளைப் பறைசாற்றிக் கொண்டு திரியக்கூடாது. அவரிடம் உள்ள குற்றங்களை நீக்கி நல்வழிப்படுத்துவது தான் நல்ல நட்பின் தன்மை.

www.padippakam.com



ஒருவன் செல்வச் செழிப்போடு, நல்ல நிலையில் இருக்கும் வேளையில், பலர் அவனுடன் நட்புப்பூண்டு, அவனின் பணத்தில் குடித்துக்கும்மாளம் அடிப்பதையும், பின்னர், அவன் வறுமையடைகிற வேளையில், வற்றிய குளத்தை விட்டுப் பறந்தோடி விடும் பறவைகளைப் போல, நழுவி விடுவதையும், இவ்வுலகில் காணக் கூடியதாயுள்ளது. இது வெறும் போலிநட்பு; பயனைப் பெறுவதற்கான பகட்டு நடிப்பு.

துன்பத்தை நீக்குவது மட்டுமே நட்பின் தன்மையல்ல; உரிய காலத்தில் ஓடோடிச் சென்று, நண்பனின் மானம், பெருமை முதலியவற்றிற்கு ஊறு வருவதற்கு முன்பே உதவி புரிய வேண்டும்.

இவ்வாறான உண்மையான நண்பர்களைத் தெரிவு செய்து, வாழ்க்கையில் நட்புறவு கொள்ள வேண்டும். பகட்டு மிக்க போலிகளில் மயங்கக் கூடாது. அது பயனற்றது.

**''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு''**

—குறள்.

உள் வீதி சுற்றி வந்த சுவாமி, கோயில் கோபுர வாசலில் தரித்து நின்றது... அஷ்டோத்தர நாமங்களால் அர்ச்சித்து, பக்தி சிரத்தையோடு பஞ்சாராத்தியைக் காட்டிய குருக்களின் கண்களில் துளிர்த்து விட்டநீர், விளக்குகளின் ஒளியில் முத்தாக மிளிர்ந்தது.

□ □

www.padippakam.com

# குறிப்புகளுக்கு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்துச் சோமு என இலங்கையில் நன்கு அறிமுகமான திரு. N. சோமகாந்தன் அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எழுதி வருபவர். அன்னாரின் ஆகுதி என்ற சிறுகதைத் தொகுதியும் விடிவெள்ளி பூத்தது என்ற நாவலும் ஈழத்து இலக்கியம் பல்துறை நோக்கு என்ற விமர்சனக் கட்டுரைகளும் ஏற்கெனவே தமிழ் நாட்டில் வெளிவந்து நன்கு அறிமுகமானவர்.

அவர் சிறந்த வானொலி, மேடைப் பேச்சாளருமாவார். அன்னார் அதிகாலையில் நடைமுறை வாழ்க்கைத் தத்துவம் என்ற தலைப்பில் மக்களை நல்வழிப்படுத்துகின்ற சிந்தனைத் தொடரை இலங்கை வானொலியில் பேசி வந்தார். அவற்றின் தொகுப்பே இந்நூலாகும்.

படிப்பகம்